# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் – 8

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | மாசி – 30 | 13–03–2004 | சனிக்கிழமை | ஓசை – 024



S.M கோல்ட் ஹவுஸ்

காலத்தால் அழியாத
கண்கவர் தங்க
நகைகளை சுத்தமான
22 கரட் தங்கத்தில்
தெரிவு செய்து
பெற்றுக்கொள்ள



S.M கோல்ட் ஹவுஸ்

இல:-46A, தர்மலிங்கம் வீதி,
வவுனியா.
T.P: 024-222 4247
(ஏ-9261) 077-6059672


# சூனியப் பிரதேசத்தில் வாக்களிப்பு நிலையங்கள் அமைப்பதென்ற வாக்குறுதி கைவிடப்படலாம்

## திருமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சந்தேகம்



**திருகோணமலை மாவட்டத்தில் எமது கட்டுப்பாட்டில் உள்ள வாக்காளர்களுக்காக வாக்களிப்பு நிலையங்கள் சூனியப் பிரதேசத்தில் அமைக்கப்படும் என்று உறுதியளிக்கப்பட்டிருப்பினும் அரசியல் தலையீடு காரணமாக அவ்வாறான ஒழுங்கு குழப்பப்படலாம் என்று அச்சப்படுவதாக விடுதலைப் புலிகள் திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திலக் நேற்று தம்மைச் சந்தித்த நோர்வே நாட்டின் சிறப்பு சமாதானத் தூதர் எரிக்சூல்ஹெய்மிடம் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது, "திருகோணமலை மாவட்டத்தில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக் கிராமங்களில் வாழும் வாக்காளர்கள் வாக்களிப்பதற்கு ஏதுவாக கட்டைப்பறிச்சான் இராணுவ முகாமுக்கு அருகில் உள்ள சூனியப் பிரதேசத்திலும் மஹிந்தபுர இராணுவ முகாமுக்கு அருகில் உள்ள சூனியப் பிரதேசத்திலும் வாக்களிப்பு நிலையங்கள் நிறுவப்படும் என்று அரசாங்க அதிபரிடம் எங்களுக்கு உறுதிமொழி வழங்கியுள்ளார். ஆனால், (8ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். அரசியல் துறையினர் சிறி. பொலிசார் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட அரசியல்துறையினருக்கும், சிறிலங்கா பொலிஸ அதிகாரிகளுக்குமிடையிலான முக்கிய சந்திப்பு ஒன்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றுள்ளது.

இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ். மாவட்ட அலுவலகத்தில் நேற்று நண்பகல் இடம்பெற்ற இச் சந்திப்பில் வடபிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் கருணாரட்ண, யாழ்.மாவட்ட பொலிஸ் பொறுப்பதிகாரி ஆனந்தசெனவிரட்ண ஆகியோரும் யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி மற்றும் யாழ். மாவட்ட மாணவரமைப்புப் பொறுப்பாளர் மணிவண்ணன் ஆகியோரும் சந்தித்துப் பேச்சுவார்த்தைகளை நடத்தினர்.

இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ். (8ஆம் பக்கம் பார்க்க)

## பொதுமக்கள்–ஈ.பி.டி.பி.யினர் அல்லைப்பிட்டியில் கைகலப்பு!

ஈ.பி.டி.பி.யினருக்கும் பொதுமக்களுக் குமிடையே கைகலப்பு ஒன்று நேற்று இடம்பெற்றுள்ளது.

அல்லைப்பிட்டிப் பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவம் பற்றி தெரிய வருவதாவது,

தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளுக்குப் புறம்பாக எதிர்வரும் தேர்தலில் யாழ். மாவட்டத்தில் போட்டியிடும் ஈ.பி.டி.பி.யினர் மேற்படி பிரதேசத்தின் பலத்த இராணுவப் பாதுகாப்புடன் வந்து வீடு வீடாகச் சென்று துண்டுப் பிரசுரங்களை விநியோகிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

இதன்போது கடந்த காலங்களில் ஈ.பி.டி.பி. யினர் யாழ். தீவகப் பகுதிகளில் சிறிலங்காப் படையினருடன் இணைந்து மேற்கொண்டு வந்த அடாவடித் தனங்களைச் சுட்டிக்காட்டி அவர்களை மக்கள் விரட்டியடிக்க முற்பட்டுள் (8ஆம் பக்கம் பார்க்க)

## – புலிகள் கட்டுப்பாட்டுப்பகுதிவாக்காளர் –

## வாக்களிப்பது குறித்த முடிவு 17ஆம் திகதி எதிர்பார்ப்பு

(வவுனியா நிருபர்)

இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியில் உள்ள வாக்காளர்கள் வாக்களிப்பது தொடர்பாக 17ஆம் திகதி தேர்தல் திணைக்களம் அறிவிக்கும் என்று எதிர்பார்ப்பதாக வவுனியா அரச அதிபர் கே.கணேஸ் தெரிவித்தார். எனினும் இன்று சனி தேர்தல் தொடர்பாக ஆராயும் கூட்டம் ஒன்று இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. பெரும்பாலும் ஆள்நடமாற்றம் இல்லாத யுத்த சூனியப்பிரதேசங்களிலேயே அமைக்கப்பட இருப்பதாக தெரிவிக் (8ஆம் பக்கம் பார்க்க)

## சந்திரிகா குற்றச்சாட்டு

தம்புள்ள காவல் நிலையப் பொறுப்பதிகாரி சுதந்திர தேர்தலுக்கு பங்கம் ஏற்படும் வகையில் நடந்து கொள்வதாக சனாதிபதி குற்றம் சுமத்தியுள்ளார்.

இது தொடர்பில் சனாதிபதி சுயாதீன காவல்துறை ஆணைக்குழுவிற்கு முறைப்பாட்டை தெரிவித்துள்ளார். பொறுப்பதிகாரி சுதந் அஸ்டமடல்லவின் செயற் (8ஆம் பக்கம் பார்க்க)

## இரு ஐரோப்பிய ஒன்றிய உறுப்பினர் வவு. அரச அதிபருடன் பேச்சு

வவுனியா மாவட்டத்தின் தேர்தல் நடவடிக்கைகள் எவ்வாறு நடைபெறுகிறது என்பது தொடர்பாக ஆராயும் முகமாக நேற்று ஐரோப்பிய ஒன்றியத்தின் இரண்டு உறுப்பினர்கள் வவுனியா அரச அதிபர் கே.கணேஷை சந்தித்து ஆராய்ந்துள்ளனர். தேர்தல் ஏற்பாடுகள் தொடர்பாகவும், தற்போதைய நிலைமைகள் தொடர்பாகவும், போட்டியிடும் கட்சிகள் தொடர்பாகவும், வன்முறைகள் தொடர்பாகவும் பிரச்சார நடவடிக்கையில் உள்ள சிக்கல்கள் தொடர்பாகவும், உத்தியோகத்தர்கள் தொடர்பாகவும் விரிவாக ஆராய்ந்திருப்பதாக வவுனியா அரச அதிபர் கே.கணேஷ் தெரிவித்தார். (21)

## கட்டுத்துவக்கு வெடித்து இளைஞர் பலி

(வவுனியா நிருபர்)

கட்டுத்துவக்கு வெடித்ததன் காரணமாக வவுனியா அடம்ஸ் கல்ஸ பகுதியில் இளைஞர் ஒருவர் இறந்துள்ளார். நாள் தோறும் வேட்டைக்காக கட்டுத்துவக்குக் கட்டுவதாகவும் நேற்று அதிகாலை கட்டுத்துவக்கு கட்டுவதற்காக சென்றபோது துவக்கு தவறுதலாக வெடித்தாகவும் இதன் போது அவர் இறந்துள் (8ஆம் பக்கம் பார்க்க)

## தினமுரசு பத்திரிகை எழுவைதீவில் இனந்தெரியாதோரால் எரிப்பு

(வடமராட்சி)

எழுவைதீவுப் பகுதியில் விற்பனைக்கென எடுத்துச்செல்லப்பட்டிருந்த "தினமுரசுப்" பத்திரிகைக்கட்டொன்று இனந்தெரியாதோரால் பறித்து தீயிடப்பட்டுள்ளது.

ஈ.பி.டி.பி. அமைப்பினால் வெளியிடப்படும் தினமுரசுப் பத்திரிகையே பட்டப்பகலில் இளைஞர்கள் சிலரால் நேற்றுப் பறித்தெடுத்து தீயிடப்பட்டுள்ளது.இதனிடையே மேற்படி பத்திரிகையின் பிரதிகளை அங்கு தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்காக சென்றிருந்த என்.ஸ்ரீகாந்தா தலைமையிலான கூட்டமைப்பின் ஆதரவாளர்களே பறித்துத் தீயிட்டதாக ஈ.பி.டி.பி. அமைப்பு குற்றஞ் சாட்டியுள்ளது. அத்துடன் குறித்த பத்திரிகையை விற்பனை செய்யும் கடையின் உரிமையாளரையும், பத்திரிகை எரிப்புச்சம்பவத்துடன் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் விடுதலைப்புலிகள் தொடர்பு பட் (8ஆம் பக்கம் பார்க்க)

## வவு. கல்விச் சமூகம் நடாத்திய தமிழர் ஒற்றுமை சீர்குலைவதற்கு எதிராக கறுப்புப்பட்டிப் போராட்டம்!

மட்டு. பல்கலைக்கழக சீர்குலைவுக்கும், தமிழ் மக்களின் ஒற்றுமைக்குலைவுக்கும் எதிராக நேற்று வவுனியா வளாக கல்விச் சமூகத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட கறுப்புப் பட்டிப் போராட்டமானது காலை 09.00 மணியளவில் வவுனியா வளாக நிர்வாகக் கட்டடத்தின் முன்பாக அமைதியாக ஆரம்பிக்கப்பட்டது. இப்போராட்டத்தில் மாணவர்கள், விரிவுரையாளர்கள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

கறுப்புப் பட்டிப் போராட்டத்தின் முடிவில் தற்போதைய மட்டு. பல்கலைக்கழக நிலைமைகள் தொடர்பாகவும், தமிழ் பேசும் மக்களின் ஒற்றுமையை வலியுறுத்தியும் வவுனியா வளாக கல்விச் சமூகத்தின் உணர்வுபூர்வமான அறிக்கையை தமிழீழ தேசியத் தலைவருக்கு வழங்கும் முகமாக வவு (8ஆம் பக்கம் பார்க்க)

## நாட்டின் எதிர்காலத்தைப் பாழடிக்கவே தேவையற்ற தேர்தலை நடத்துகிறார்

### சந்திரிகா மீது ரணில் குற்றச்சாட்டு

நாடு சமாதானப் பாதையில் சென்று கொண்டு இருக்கும்போது தமக்கு எதிர்காலம் இல்லையென்பதை அறிந்து கொண்ட சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நாட்டின் எதிர்காலத்தை பாழடிக்கவே தேவையற்ற இந்தத் தேர்தலை நடத்துகிறார். அபிவிருத்தியை தடுக்கப் பார்க்கின்றார் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று மாலை குருணாகலில் நடைபெற்ற கூட்டத்தில் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் சமாதானம் தொடர்பான கேள்விக் குறியே காணப்படுகின்றது. இன்று வரை அவர்கள் யாரைப் பிரதமராக நியமிப்பது என்ற குழப்பத்திலேயே உள்ளனர். மேலும் நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்த அவர்களிடம் எவ்வித திட்டகளும் இல்லையெனவும் பிரதமர் கூறினார்.

யுத்தம் வெல்லப்பட முடியாதது என்ற காரணத்தால் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் பேசி அவர்களை ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு காண முன்வந்த வேளையில் நிரந்தர சமாதானம் தொடர்பாக நம்பிக்கை கொண்டிருந்த வேளையில் நாடாளுமன்றைக் கலைத்து நாட்டின் எதிர்காலத்தை சனாதிபதி பாழடித்துள்ளதாகவும் பிரதமர் கூறினார். மக்கள் விடுதலை முன்னணியினரின் எந்த ஆலோ (8ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி மக்களும் வாக்களிக்கச் சந்தர்ப்பம் வழங்கவேண்டும்

## - பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர்

இம்முறை கண்காணிப்புப் பணியல் ஈடுபடவுள்ள கண்காணிப்பாளர்கள் அனைவரும் தாம் எந்த கட்சியையும் சாராதவர்கள் எனப் பிரகடனமொன்றில் கைச்சாத்திட்டுள்ளார்கள் என்றும் தாம் கண்காணிப்புப் பணியில் ஈடுபடும் 18வது தேர்தல் இது என்பதால் தாம் இது குறித்து போதிய அனுபவம் பெற்றிருப்பதாகவும், பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கிங்ஸ்லி ரொட்ரிகோ கூறியுள்ளார்.

அத்துடன் விடுதலைப்புலிகளும், விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள மக்களும் சனநாயக வழிமுறைகளுக்குத் திரும்புவதை ஊக்குவிக்க வேண்டுமானால் அவர்களுக்கு இம்முறை வாக்களிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படவேண்டும் என்றும் கூறிய அவர்,

எதிர்வரும் இரண்டாம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலின்போது தேர்தல் தினத்தன்று மாலை 6.30 மணியில் இருந்து வாக்களிப்பு முடிவடைந்து வாக்குப் பெட்டிகள் வாக்கெண்ணும் நிலையங்களுக்கு எடுத்துச் செல்லப்படும்வரை ஒவ்வொரு வாக்களிப்பு நிலையத்திலும் எமது உறுப்பினர்கள் கண்காணிப்புப் பணியில் ஈடுபடுவார்கள் என்றும் அவர் கூறியுள்ளார்.

அரசியலமைப்பின் 17வது திருத்தத்தின் பிரகாரம் தேர்தல் ஆணையாளருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி முறைகேடுகள் இடம்பெறும் வாக்களிப்பு நிலையங்களின் வாக்களிப்பை ரத்துச் செய்ய தேர்தல் ஆணையாளருக்கு அதிகாரம் உள்ளதாகச் சுட்டிக்காட்டியுள்ள அவர் தேர்தல் ஆணையாளர் அத்தகையதொரு முடிவை எடுப்பதற்குத் தேவையான ஆதாரங்களைத் தாம் வழங்குவதாகவும் கூறியுள்ளார்.

# கிளி.மாவட்ட பண்பாட்டு மண்டபம் நேற்று திறந்து வைப்பு

(அலுவலகசெய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட பண்பாட்டு மண்டபத்திறப்புவிழா நேற்று பகல் 10.30 மணிக்கு கலைபண்பாட்டுக்குழுத்தலைவரும் அரசஅதிபருமாகிய தி.இராசநாயகம் தலைமையில் நடைபெற்றது.



நிகழ்வின் பொதுச்சுடரினை தமிழீழ நிர்வாக சேவையைச் சேர்ந்த சின்னப்பா மாஸ்ரர் ஏற்றி வைக்க தமிழீழ தேசியக்கொடியினை கிளி.மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் முரளி ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து மங்கல விளக்கேற்றல் நிகழ்வு இடம்பெற்றது. மங்கல விளக்கினை கிளி. மாவட்ட நிர்வாக சேவைப் பொறுப்பாளர் முரளி, சமுக அபிவிருத்தி அமைச்சின் பணிப்பாளர் சி.நவரட்ணம், அமைச்சின் திட்டமிடல் பணிப்பாளர் எஸ்.டானியல், யாழ். அரசஅதிபர் செ.பத்மநாதன், கிளிநொச்சி மாவட்ட பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி ஆகியோர் ஏற்றி வைத்தனர். பெயர்ப் பலகையினை கிளி.அரச அதிபர் தி.இராசநாயகம் திரைநக்கம் செய்து வைத்தார். அடுத்து மண்டபத்தினை நிகழ்வின் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட சமூக அபிவிருத்தி அமைச்சின் செயலர் எம்.வாமதேவன் சம்பிரதாய பூர்வமாக நாடாவினை வெட்டித் திறந்து வைத்தார்.

அடுத்து மண்டபநிகழ்வில் ஆசியுரையினை கிளி.கந்தசாமி ஆலய பிரதம குருக்கள், உருத்திரபுரீஸ்வர ஆலயக் குருக்கள், ஆகியோர் வழங்கினார். வரவேற்புரையினை கரைச்சி பொன் நித்தியானந்தம் நிகழ்த்தினார். தலைமையுரையினை அடுத்து சிறப்புரைகள் இடம்பெற்றன. (சோ)

# ஐ.தே.க.வுடன் கூட்டுச் சேர்ந்த போதும் முஸ்லிம்களின் எதிர்பார்ப்பு நிறைவேறவில்லை

## ஐ.ம.சு. முன்னணி வேட்பாளர் அமானுல்லா

முஸ்லிம்களின் கடந்த தேர்தலில் ஐ.தே.கட்சிக்கு வாக்களித்து ஐ.தே.கட்சியுடன் கூட்டுச் சேர்ந்திருந்த போதும் அவர்களது எந்தவொரு எதிர்பார்ப்பையும் அக்கட்சி நிறைவேற்றவில்லை.

இவ்வாறு ரஜரட்டவில் தனது ஆதரவாளர்களுடனான சந்திப்பின்போது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அநுராதபுர மாவட்ட வேட்பாளர் அமானுல்லா கூறியுள்ளார்.

நாட்டில் சமாதானமும் தமது உரிமைகளுக்கும் பாதுகாப்பும் கிட்டும் என நினைத்தே முஸ்லிம்கள் கடந்த தேர்தலில் ஐ.தே. கட்சிக்கு வாக்களித்தார்கள்.

ஆனால், சமாதானத்தின் பயன்கள் முஸ்லிம்களுக்கு கிடைக்கவும் இல்லை. உரிமை கள் பாதுகாக்கப்படவும் இல்லை.

நாடு அழிந்துவிடக்கூடாது. நாடு இருந்தால் தான் எம்மால் எதையும் செய்ய முடியும். இதனால் தான் இம்முறை தமிழ், சிங்கள, முஸ்லிம்கள் கூட்டாக இணைந்து கூட்டணியில் போட்டியிடுகின்றார்கள். இம்முறை கூட்டணிபெரு வெற்றியீட்டும். அந்த வெற்றியை எந்தவொரு சக்தியாலும் தடுக்க முடியாது என்றும் அவர் கூறியுள்ளார்.

# இராணுவக் காவலரண்கள் சிலவற்றை அகற்ற வவு.வில் நடவடிக்கை

(செட்டிகுளம்)

வவுனியா மாவட்டத்தில் இராணுவ நடவடிக்கையின்போது அமைந்திருந்த காவலரண்களை அகற்றுவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட இருப்பதாக வவுனியா அரச செயலக தகவல்கள் தெரிவிக்கின்றன. இதன் மூலம் 65.2 கிலோ மீற்றர் காவலரண்கள் அகற்றப்படவுள்ளது. சேமமடு, ஆறுமுகத்தான் புதுக்குளம், பன்றிக்கெய்தகுளம், இளமருதகுளம், மாளிகை, பறநாட்டகல், நொச்சிமோட்டை, தாண்டிக்குளம், கல்மடு, பூவரசன்குளம், மறக்காறம்பளை, சாளம்பைக்குளம், பம்படு, ஒமந்தை, மருதங்குளம் மற்றும் புதுக்குளம் ஆகிய 15 கிராமங்களில் மேற்படி காவலரண்களை அகற்றப்படவுள்ளன. இதற்கு என 25,651,725 ரூபா செலவாகும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.(21)

# ஐக்கிய தேசியக்கட்சிக்கு ரணில் வெற்றிப்பாதை ஏற்படுத்துவார்

## - அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்கா தெரிவிப்பு

பிரித்தானிய ஏகாதிபத்திய வாதிகளிடமிருந்து இலங்கைக்கு சுதந்திரம் பெற்றுத்தந்தவர் எமது தேசியத்தந்தை டி.எஸ்.சேனாநாயக்கா அவர்கள் அந்தக் கட்சியை வழிநடத்தி ஒரு வெற்றிப் பாதையை இம்முறை பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சித் தலைவர் ரணில் விக்கிரசிங்க வெற்றி பாதையில் இட்டுப்பெறும் வெற்றியினை கட்சிக்கு ஈட்டித்தரப்போகின்றார் என அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்தார்.

யுத்தத்தை நிறுத்தி சமாதானத்தை நிலைநாட்டுவோம் எனக் கூறி சனாதிபதி ஆட்சிப்பீடம் ஏறிய சந்திரிகா அம்மையாரின் ஆட்சியில் முப்படைகளிலும் 5000 அதிகமாக படையினர்கள் இறந்துள்ளனர். இன்னும் 3000 படைவீரர்கள் இதுவரை காணாமல் போய்யுள்ளனர். தற்பொழுது சர்வதேச நாடுகள் எமது அரசுக்கு 46000 ரூபா கோடியே வழங்கப்படவுள்ளது. இந்த நிதி கிடைத்ததும் சந்திரிகாவை நாங்கள் தூக்கி எறியப்போகின்றோம் என அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்கா நுவரெலியா மாவட்டத்தில் நடந்த தேர்தல் பிரச்சார கூட்டத்தில் தெரிவித்துள்ளார்.

## தடகளப்போட்டி

கரைதுறைப்பற்று கோட்ட பாடசாலைகளுக்கிடையேயான தடகளப்போட்டி எதிர்வரும் 15ஆம் 16ஆம் திகதிகளில் முல்லைத்தீவு மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது. சகல மைதான போட்டிகளும் அறிவிக்கப்பட்ட நேரத்திற்கு அந்தந்த விளையாட்டுக்கள் நடைபெறும் எனவும் கரைதுறைப்பற்று கோட்டக் கல்வி அதிகாரி திரு.தியாகராஜா தெரிவித்தார்.(20)

# உறைவிடம் அமைத்தல் தொடர்பாக ஒருநாள் பயிற்சிப் பட்டறை

வடகிழக்கு யுத்தத்தால் பாதிப்புற்று தங்கள் சொந்த உறைவிடங்களை இழந்த மக்களை இனங்கண்டு அவர்களின் வாழ்வை வழமைக்குக் கொண்டுவரும் நோக்கில் உறைவிடம் அமைத்தல், கிராமங்களின் அபிவிருத்திப் பணியில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் செயற்படுத்தி வருகின்றது.

நெக்கொட் நிறுவனத்துடன் தமிழர்புனர்வாழ்வுக்கழகம் இணைந்து இலங்கை வடகிழக்கு மாகாணத்திலுள்ள எட்டு மாவடடங்களில் திட்டத்தினை செயற்படுத்தி வருகின்றது.

திட்டங்களை வலுவூட்டும் நோக்கில் தமிழர்புனர்வாழ்வுக் கழகமானது மாதாந்த பயிற்சிப் பட்டறைகளை நடாத்துவது என தீர்மானம் செய்வதற்கு இணங்க முதல் கட்டமாக வவுனியா மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழக ஆதரவில் வவுனியா விவசாயப் பயிற்சிக் கூட்டத்தில் இன்று காலை 9.00 மணிக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழக நிறைவேற்றுப் பணிப்பாளர் கே.பி.றெஜி தலைமையில் இடம்பெறவுள்ளது.

இவ் ஒருநாள் பயிற்சிப் பட்டறையில் நியாப், நெக்கொட் திட்ட இணைப்பாளர், தமிழர் புனர்வாழ்வுக்கழக திட்ட இணைப்பாளர்கள், திட்டமேற்பார்வையாளர்கள் என பலரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

## வீதி விபத்தில் ஒருவர் படுகாயம்

எதிர்எதிரே வந்த மோட்டார் சைக்கிளும் துவிச்சக்கர வண்டியும் மோதியதால் துவிச்சக்கர வண்டியில் சென்றவர் பலத்த காயத்துக்குள்ளாகி முல்லைத்தீவு கட்டம் 01 மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக புதுக்குடியிருப்பு வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

நேற்று முற்பகல் வேளையில் நெடுங்கேணி பிரதான வீதியில் களிக்காடுச்சந்தியை அண்மித்த பகுதியிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. மேற்படி சம்பவத்தில் 3ஆம் வட்டாரம் முள்ளியவளையை சேர்ந்த இராசையா தெய்வேந்திரம் என்பவரே படுகாயப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஆ)

# வன்னேரிக்குளம் ம.வி இல்ல மெய்வன்மைப்போட்டி

(அலுவலகசெய்தியாளர்)

கிளி/ வன்னேரிக்குளம் ம.வியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு கடந்த வாரம் வித்தியாலய முதல்வர் சு.தர்மரத்தினம் தலைமையில் வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது. நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக கரைச்சிக் கோட்ட கல்வி அதிகாரி வி.சிற்றம்பலம் மற்றும் சிறப்பு விருந்தினராக அக்கராயன் பிரதேச அரசியல் துறைப்பொறுப்பாளர் முடியரசன், வன்னேரி-முழங்காவில் வைத்திய அதிகாரி ச.முருகானந்தன் மற்றும் அயற்பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்களும் கலந்து கொண்டு நிகழ்வைச் சிறப்பித்தனர். இதில் மங்கல விளக்கேற்றலைத் தொடர்ந்து தேசியக்கொடியை வன்னேரி வல்ய அரசியல் துறைப்பொறுப்பாளர் வேந்தன் ஏற்றி வைத்தார். ஒலிம்பிக் கொடியை ச.முருகானந்தம் வைத்திய அதிகாரியும், பாடசாலைக்கொடியை பாடசாலை முதல்வரும், இல்லக் கொடிகளை இல்லப்பொறுப்பாசிரியர்களும் ஏற்றி வைத்தனர். நிகழ்வுகள் மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்றது. இறுதியில் 628 புள்ளிகளைப் பெற்று அறிவு இல்லம் முதலாம் இடத்தையும் 627புள்ளிகளைப் பெற்று அன்பு இல்லம் இரண்டாம் இடத்தையும் பெற்றுக்கொண்டன. (சோ)

# கால்நடை பண்ணையாளர்களுக்கு அபிவிருத்தி மானியம் வழங்கல்

ஒட்டுசுட்டான் கால்நடை வைத்தியர் பிரிவிற்குட்பட்ட கால்நடை (மாடு) பண்ணையாளர்களுக்கு கால்நடை அபிவிருத்தித் திணைக்களத்தினால் பண்ணை அபிவிருத்திக்கான மானியம் வழங்கப்படவுள்ளது.

மானியத்தைப் பெற்றுக் கொள்ள விரும்பும் பண்ணையாளர்கள் ஒட்டுசுட்டான் புளியங்குளத்தில் தற்காலிகமாக இயங்கும் கால்நடை வைத்தியர் பணிமனையுடன் 30.03.2004 இற்கு முன்பாக தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகிறீர்கள். இது சம்பந்தமான மேலதிக விபரங்களை அங்கு பெற்றுக்கொள்ளலாம்.


## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் கிளிநொச்சி மாவட்டக் கிளை

இலங்கைச் செஞ்சிலுவைச்சங்க கிளிநொச்சி மாவட்டக் கிளையில் புதிய அங்கத்தவர்கள் இணைத்துக் கொள்ளல், காலாவதியான அங்கத்துவத்தை புதுப்பித்தல் போன்ற நடவடிக்கைகள் எதிர்வரும் 25.03.2004 வியாழக்கிழமையுடன் நிறைவு பெறவுள்ளது. எனவே புதிதாக இணைத்துக் கொள்ள விரும்பும் அங்கத்தவர்களும், புதுப்பித்துக் கொள்ள வேண்டிய அங்கத்தவர்களும் 2004.03.25க்கு முன் கரைச்சி, கண்டாவளை, பூநகரி, பளை பிரிவுக்கிளைகளுடன் அல்லது மாவட்டக் கிளையுடன் தொடர்பு கொள்ளும்படி அன்புடன் வேண்டுகிறேன்.

'நன்றி'

க.கணேஸ்
கௌரவ செயலாளர்.

(சி-9417)

# தென்கொரிய சனாதிபதிக்கெதிராக குற்றவியல் பிரேரணை நிறைவேறியது!

(சியோல்)

**தென்கொரியாவில் எதிர்க்கட்சியினரின் கட்டுப்பாட்டிலுள்ள பாராளுமன்றம் சனாதிபதி றோமோ கியூனை பதவியிலிருந்து இடைநிறுத்தும் நோக்கில் குற்றவியல் சட்டமூலத்தை நேற்று நிறைவேற்றியுள்ளது.**

237 அங்கத்தவர்களைக் கொண்ட தேசிய பாராளுமன்றத்தில் 193பேர் குற்றவியல் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்துள்ளதாக சபாநாயகர் அறிவித்துள்ளார். அத்துடன் 02பேர் எதிர்த்து வாக்களித்துள்ளனர். ஏனையோர் வாக்களிப்பதில் கலந்து கொள்ளவில்லை.

அரசியல் யாப்பிற்கு அமைய தென்கொரியாவின் பிரதமர் இடைக காலத்தில் நாட்டின் தலைவராக பதவிவகிக்க இயலும். தென் கொரியா சனாதிபதி சட்டவிரோதமாக தேர்தல் பிரச்சாரம் செய்கிறார் என்பதற்காக மட்டுமல்லாமல், நிதி ஊழல்களில் அவர் சம்பந்தப்பட்டிருப்பினும் நாட்டை உரிய முறையில் நிர்வகிக்காத தினாலேயே குற்றவியல் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டதாக பிரதான எதிர்க்கட்சி தெரிவித்துள்ளது.

# அமெ. மீதான தாக்குதல் நடவடிக்கை இறுதிக்கட்டத்தை அடைந்துள்ளது

## - அல்ஹைறதா அமைப்பு கடிதம்

அமெரிக்கா மீது மேற்கொள்ளப்பட்டுள்ள தாக்குதவல் சம்பந்தமான நடவடிக்கைகள் இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளதெனவும் இவற்றுள் 90சதவீதமான செயற்பாடுகள் பூர்த்தியடைந்துள்ளதாக அல்ஹைறதா அமைப்பு வெளியிட்டுள்ள கடிதம் ஒன்றில் கூறப்பட்டுள்ளது.

இது உலகெங்கும் வாழ்கின்ற முஸ்லிம்களுக்கு ஓர் நற் செய்தியாகவிருக்குமெனவும் மேலும் கூறப்பட்டுள்ளது. லண்டனிலிருந்து வெளியிடுகின்ற அரபுமொழிப் பத்திரிகை இககடிதத்தை பிரசுரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அரிஸ்டைட் விரைவில் ஜமேக்காவிற்குச் செல்வார்

கெயிட்டியிலிருந்து தப்பியோடிய முன்னாள் சனாதிபதி அரிஸ்டைட் மத்திய ஆபிரிழீக்க குடியரசில் தற்போது தங்கியுயள்ளார்.

இவர் அங்கிருந்து கெயிட்டிக்கு 180 கிலோமீற்றர் மேற்கேயுள்ள ஜமேக்காவிற்குச் செல் லவுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை கெயிட்டியிலிருந்து வெளியேறிய முன்னாள் சனாதிபதி அரிஸ்டைட் மீண்டும் நாட்டிற்கு அழைக்கப்படவேண்டுமெனக் கூறி ஆர்ப்பாட்டம் நடைபெற்றுள்ளது.

* இதன்போது பொலிசார் நிகழ்த்திய துப்பாக்கிச் சூட்டில் 02பேர் உயிரிழந்துள்ளதுடன் 06போ காயமடைந்துள்ளனர்.

# ஸ்பெயின் குண்டுவெடிப்பு இறந்தோர் 192ஆக அதிகரிப்பு

ஸ்பெயினின் தலைநகரான மட்றிட்டில் புகையிரத சேவை அமைப்பின் மீது குண்டுவெடித்ததில் உயிரிழந்தவர்களின் தொகை 192 ஆக அதிகரித்துள்ளது. அத்துடன் 1400ற்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர்.

இங்கு தேர்தல் நாளை நடைபெற இருக்கின்ற இத்தாக்குதல் வேளையில் நடத்தப்பட்டிருப்பது தேர்தலைக் குழப்புவதற்கே என்று குற்றம் சாட்டப்படுகின்றது.


பாக் மாகாணத்தை தனிநாடாக அறிவிக்கக் கோரி ஆயுதம் ஏந்திப் போராடிவரும் ரி.ஈ.ஏ. எனும் இயக்கம் தான் இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளதாக ஸ்பெயினின் பிரதமர் குற்றம் சாட்டியுள்ளார்.

இந்தக் குண்டு வெடிப்புச் சம்பவத்திற்கு அமெரிக்கா, பிரான்ஸ்,ஜேர்மனி போன்ற நாடுகள் கடும் கண்டனம் வெளியிட்டுள்ளன.


இதேவேளை அமெரிக்க சனாதிபதி புஷ், இந்தத் தாக்குதலை ரி.ஈ.ஏ.இயக்கம் தான் நடத்தியுள்ளது என்று குற்றம் சாட்டியுள்ளது.

இதேவேளை ரயில்வே நிலையத்திற்கு அருகேயிருந்த மோட்டார் சைக்கிளில் இருந்து வெடிக்கவைக்கும் சாதனங்களும், இன்னும் பல பொருட்களும் அரபுமொழி செய்தி ஒன்றை உள்ளடக்கிய ஒலிப்பதிவு நாடாவும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இந்நாடாவில் ரயில் நிலைய தாக்குதல்களுக்கு பின்லேடனின் அல் ஹைறதா இயக்கமே காரணம் என்று லண்டன் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதேவேளை இத்தாக்குதலைக் கண்டித்து ஆயிரக்கணக்கானோர் போராட்டங்கள் நடத்தி வருகின்றனர்.



ஒரே நேரத்தில் 10 குண்டுகள் வெடித்ததால் பயணிகள் புகையிரதப் பெட்டியில் ஏற்பட்டுள்ள பாரிய ஓட்டை.



ஸ்பெயினில் பயணிகள் புகையிரதத்தில் குண்டுகள் வெடித்ததையடுத்து அப்பாதைக்கான மின்சார ரயிலுக்குரிய மின்சாரத்தைத் துண்டிக்கும் பணியாளர்.



ஸ்பெயினின் நீதித்துறை நிபுணர்கள் புகையிரத குண்டு வெடிப்பில் கொல்லப்பட்டவர்களது சடலங்களைப் பார்வையிடுகின்றனர்.

## –சிம்பாவ்வேயில் கைது செய்யப்பட்ட–

# 60 வெளிநாட்டு கூலிப்படையினரை தூக்கிலிடப் போவதாக மிரட்டல்

(கராரே)

சிம்பாவ்வேயில் கடந்தவாரம் கைது செய்து தடுத்து வைத்திருந்த 06 வெளிநாட்டு கூலிப்படையினரை தூக்கிலிடப் போவதாக அந்த நாட்டு அரசு நேற்று முன்தினம் அச்சுறுத்தியுள்ளது.

அமெரிக்காவில் பதிவு செய்யப்பட்ட விமானம் ஒன்றில் வைத்து இக்கூலிப்படையினரை சிம்பாவ்வே பொலிசார் கைது செய்தமை தெரிந்ததே.

சிம்பாவ்வே அரசாங்கத்தை கவிழ்ப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட சதிமுயற்சியில் அமெரிக்கா, பிரிட்டன்,ஸ்பானிய உளவுஸ்தாபனங்கள் சம்பந்தப்பட் டிருப்பதாக சிம்பாவ்வே அரசு குற்றஞ்சாட்டியுள்ளது. சிறிய எண்ணெய் உற்பத்தி நாடான சிம்பாவ்வேக்கு எதிராக எதிரி நாடுகளும் பல்தேசிய கம்பனிகளும் சதிமுயற்சியை மேற்கொண்டு வருவதாக அந்த நாடு குற்றம்சாட்டிவருகிறது.

## அமெரிக்கா முடிவு

மியன்மாரில் ஆன்சான் சூகியை மாதக் கணக்கில் இராணுவ ஆட்சியாளர் தடுப்புக்காவலில் வைத்திருந்தமைக்காக அந்த நாட்டிலிருந்து அமெரிக்காவுக்கான இறக்குமதிகளைத் தொடர்ந்தும் தடுத்துவைக்கப்போவதாக அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் கொலின்பவல் தெரிவித்துள்ளார்.

மியன்மார் நிலவரங்களில் அபிவிருத்தி எதையும் காணவில்லை எனத் தெரிவித்த அவர் தொடர்ந்தும் சூகி பொதுமக்கள் முன்னிலையில் தோன்றவோ அரசியல் நடவடிக்கையில் ஈடுபடவோ முடியாத நிலையில் இருப்பதாகக் கூறியுள்ளார்.

கடந்த கோடைகாலத்தின் போது இறக்கப்பட்ட மியன்மார் இறக்குமதிகள் தொடர்ந்தும் அமுலில் இருக்குமா என்று கேட்கப்பட்ட போது,

ஒவ்வொரு வருடமும் புதுப்பிக்கப்படவுள்ள இந்த இறக்குமதி தடை தொடர்ந்து மூன்று வருடங்களுக்கு நடைமுறைப்படுத்தப்படும் என்று கொலின்பவல் தெரிவித்தார்.



நியூயோர்க்கில் உள்ள ஒரு பங்குச் சந்தை.

# வரும் பொதுத் தேர்தல் நாட்டின் அரசியல் வரலாற்றையே மாற்றிவிடும்

## இந்.துணைப்பிரதமர் அத்வானி

(புதுடில்லி)

எதிர்வரும் பொதுத் தேர்தல் நாட்டின் அரசியல் வரலாற்றையே மாற்றியமைத்துவிடும் என இந்தியாவின் துணைப்பிரதமர் அத்வானி தெரிவித்துள்ளார்.

இந்தியா ஒளிர்கிறது என்ற யாத்திரிகையின் இரண்டாவது நாளான நேற்றுமுன்தினம் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில் பல ஆண்டுகள் ஆட்சியிலிருக்க அதிகாரம் பெற்ற காங்கிரஸ் கயாட்சியை நல்லாட்சியாக மாற்றமுடியாமல் நாடு பின்நோக்கி நகர்ந்துள்ளதென குற்றம் சாட்டியுள்ளார். 2020 ஆம் ஆண்டிற்கு இந்தியாவை முற்றிலும் வளர்ச்சியடைந்த நாடாகமாற்ற இந்தியா அரசு உறுதியாக உள்ளதென தெரிவித்துள்ளார்.

அத்துடன் அயோத்தி பிரச்சினைக்கு மக்களவைத் தேர்தலுக்குப் பின்னர் தீர்வுகாணைபாம் எனக் கூறியுள்ளார்.

# டொமினிகன் குடியரசு

டொமினிகன் குடியரசு ஹிஸ்பேனியோலா தீவின் கிழக்கில் மூன்றில் இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது.

ஆரம்பத்தில் ஸ்பெயினின் கீழிருந்த இது 1844 இல் சுதந்திரமடைந்தது இது ஒரு சிறந்த விவசாய நாடு.

* தலைநகர்:- ஸன்டோ டொமின்கோ.
* பரப்பு:- 48422 சதுர கிலோ மீற்றர்
* மொழி:- ஸ்பானிஷ்.
* எழுத்தறிவு:- 68 சதவீதம்
* சமயம்:- கிறிஸ்தவம்
* நாணயம் :- பெஸோரோ டொலர்
* முக்கிய விளைபொருள்:- கரும்பு, கோப்பி, கொக்கோ


# புதிய காமா 0830 MP-3 றெக்கோட் பிளேயர்

யப்பானின் காமா எலக்ரொனிக் கம்பனி புதிய "Hama 0830 MP-3" றெக்கோட் பிளேயர் ஒன்றை உருவாக்கியுள்ளது. 128MB மெகாபைற் கொள்ளளவைக் கொண்ட மெமறிசிப்பும் இதனுடன் இணைக்கப்பட்டுள்ளது. இது றேடியோவையும் கொண்டுள்ளது.



# மினிடிஸ்க் ஒலிப்பதிவு றெக்கோட் பிளேயர்

யப்பானின் மற்சுசிரா எலக் ரிக்கல் கம்பனி புதிய கொண்டு செல்லக்கூடிய மினிடிஸ்க் ஒலிப் பதிவு முறையுடனான("SJ-MR270") றெக்கோட் பிளேயர் ஒன்றை பரிடிஜிட்டல் முறையில் பதிவுசெய்யப்படும். இந்த றெக்கோட் பிளேயாரில் இணையத்தளத்திலிருந்தும் பிரத்தியேக கணினிகளிலிருந்தும் ஒலிவடிவத்திலான விடயதானஸ்களைப் பெற்றுபதிவு செய்து வைக்கமுடியும். இது மற்சுசிரா கம்பனியின் அறையில் காட்சிக்காக வைக்கப்பட்டுள்ளது. இதை கம்பனி 40 ஆயிரம் ஜென் விலையில் சந்தைப்படுத்த முடிவு செய்துள்ளது.



# தெரிந்துகொள்ள...

* இலங்கை மத்திய வங்கி எச்சட்டத்தின் பிரகாரம் எப்போது ஆரம்பிக்கப்பட்டது?

1949ஆம் ஆண்டு நிதிச்சட்டத்திற்கு அமைய 1950-ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது.

* இலங்கை மத்திய வங்கியின் நாணய சபை உறுப்பினர்கள் யாவர்?

மத்திய வங்கி ஆளுநர் நிதியமைச்சின் செயலாளர் நியமன உறுப்பினர்.

* இலங்கை மத்திய வங்கியின் தொழிற்பாடுகள் எவை?

1. நாணய வெளியீடு
2. வங்கிகளின் வங்கியாகத் தொழிற்படுதல்.
3. வணிகவங்கிகளின் நிர்வகமாகச் செயற்படுதல்.
4. அரசின் வங்கியாகச் செயற்படுதல்.
5. அந்நியச் செலாவணிக் கொடுக்கல் வாங்கலை நெறிப்படுத்துதல்.
6. அரச பொருளாதார ஆலோசகராகச் செயற்படல்.
7. நிதித்தொழில் நிறுவனங்களைக் கட்டுப்படுத்துதல்.

தபால் முத்திரைகளை ஒவ்வொன்றாக கிழித்து எடுப்பதற்கு இலகுவாக சிறிய துளைகள் வரிசையாகப் போடப்பட்டிருக்கின்றன அல்லவா? இந்த துளைகளுக்கு பர்போரேஷன் என்று பெயர். இந்த துளைபோடும் கருவிக்கு பர்போரேட்டர் என்று பெயர்.

# பொட்டாசியம்: இதயத்தின் நண்பன்

உடலுக்கு மிக அவசியமான தாதுப்பொருட்களில் பொட்டாசியம் முக்கியமானது. இரசாயன ரீதியாக எடுத்துக்கொண்டால் சோடியத்தைப் போன்றது. நரம்பு செலகளின் செயற்பாட்டுக்கு பொட்டாசியம் அவசியம். இரத்தத்திலும் திசுக்களிலும் காணப்படும் நீர்த் தன்மையும் அசிட் அடிப்படையிலான தன்மையையும் பாதுகாக்க இது உதவுகிறது. உடலில் சோடியம் அதிகரித்தால் அது உயர் இரத்த அழுத்தத்தை ஏற்படுத்தும். பொட்டாசியம் உடலில குறையுமானால் சோடியத்தையும் நீரையும் உடல் தக்கவைத்துக் கொள்ளும். இதன்காரணமாக இரத்த அழுத்தம் அதிகரிக்கின்றது. ஒருவர் இயற்கை ரீதியாக பொட்டாசியத்தை முறையாக பெற்று வருவாரானால் சோடியத்தின் அளவு குறைந்து அவர் பக்கவாதம், உயர் இரத்த அழுத்தம் போன்ற அபாயத்தில் இருந்து மீளக்கூடியதாக இருக்கும். தினசரி உங்கள் உடலுக்கு மூவாயிரத்து 500மில்லி பொட்டாசியம் அவசியம். இதனை உணவுகளின் மூலம் பெற்றுக்கொள்ள வேண்டும். நேரடியாகப் பொட்டாசியத்தை உட்கொள்வது பின் விளைவுகளை ஏற்படுத்தலாம் என்பதால் பொட்டாசியம் நிறைந்த அப்பிள், அப்ரிகொட், அவரை, வாழைப்பழம், தோடம்பழம், எலுமிச்சை, லெட்டியூஸ், காளான், மீன், தோலுடன் கூடிய உருளைக் கிழங்கு, தக்காளி, ஈச்சம்பழம், பசளி போன்றவற்றில் பொட்டாசியம் அதிகம். உயர் இரத்த அழுத்தம் வரலாம் என நினைப்பவர்கள் பொட்டாசியம் செறிந்த உணவுகளை உட்கொண்டு வர வேண்டும். ஆனால் ஏற்கனவே குறிப்பிட்டதைப்போல மருத்துவ ஆலோசனையின்றி பொட்டாசியத்தை நேரடியாக உட்கொள்ளக் கூடாது. மேலும் உயர் இரத்த அழுத்த நோயால் பீடிக்கப்பட்டவர்களும் அதன் விளைவுகளான இருதய நோய், சிறுநீரக நோய், இதயத்துடிப்பில் மாற்றம் போன்றவற்றினால் பாதிக்கப்பட்டவர்களும் இவற்றுக்கான மருந்துகளைப் பாவித்து வருவதால் பொட்டாசிய உணவுகளை மருத்துவரின் ஆலோசனைப்படி தவிர்த்து விடுவதே நல்லது. மாமிசம், பொட்டாசியம் மிகுந்த ஒரு உணவாக இருந்தாலும் அதில் கொழுப்பும் சோடியமும் இருப்பதால் கவனமாக இருக்க வேண்டும். எனவே வருமுன் காக்கும் நடவடிக்கையாக பொட்டாசியம் செறிந்த உணவுகளை உண்பதே சிறந்தது.

# வெந்தயத்தின் குணம்

வெந்தயத்தின் முக்கிய குணமே நம் உடல் நிலையைச் சமநிலையில் வைத்துக்கொள்வது தான்! உடலைப் பொறுத்து சூட்டை குறைக்கும் தன்மையும் அதிகரிக்கும் தன்மையும் கொண்டது. உடல் அதிக குளிர்ச்சியால் சளி, நெஞ்சில் இருப்பவர்களுக்கு இரண்டு பல் பூண்டுடன் வெந்தயத்தைப் பவுடராக்கி கால் ஸ்பூன் இரண்டு நேரம் சாப்பிட்டுவர சளி சுத்தமாகக் குறைந்து விடும். நீரிழிவு நோயாளிக்கு இது இன்னும அதிகபலனைத் தரும்.

குடற் புண்களை ஆறச்செய்வதும், குடற் பூச்சிகளை வெளியேற்றுவதும் வெந்தயத்தின் முக்கிய குணங்களாகும். சில குழந்தைகள் வயதுக்கேற்ற சுறுசுறுப்பின்றி மந்தமாகக் காணப்படுவார்களாயின் வெந்தயத்தை ஒரு ஸ்பூன் எண்ணெயுடன் கலந்து சிறு நெல்லி அளவு வெறும் வயிற்றில் கொடுத்தால் பூச்சிகள் மலத்தோடு வெளியேறும். பெரியவர் இந்த அளவைவிடக் கூட்டி அருந்தலாம். மேலும் வெந்தயத்தை நன்கு ஊறவைத்து அரைத்து, புளித்த தயிரில் கலந்து வாரம் ஒரு முறை தலைக்கு குளிப்பதால் நல்ல பலன் கிடைக்கும்.

வெந்தயக் கீரைக்கும் மருத்துவ குணம் இன்னும் அதிகம் உண்டு. இதில் விற்றமின் தாதுச் சத்துக்களும் உள்ளன. கண்பார்வை தெளிவடைய விற்றமின் ஏ உடலின் எதிர்ப்புச் சக்தியை உண்டு பண்ணும். தாமிரம், கந்தகம், சுண்ணாம்பு, மகனீஷியம் போன்ற தாதுச் சத்துக்களும் இதில் உள்ளன. பெண்களிற்கு மாதவிலக்கின் போது ஏற்படும் அதிக உதிர போக்கிற்கும் இக்கீரை நல்ல பயனளிக்கும். கண்ணில் கருவளையும் விழும் பெண்களுக்கு இது இன்னமும் வரப்பிரசாதம். வெந்தயக் கீரையையும் புதினாவையும் அரைத்துப் பூசி ஒருமணி நேரம் கழித்து கழுவ முகம் பொலிவாகும்! மேலும் வெந்தயக் கீரையுடன் வாழைத் தண்டு சேர்த்துச் சமைத்துச் சாப்பிட்டால் உடம்பில் தேவையில்லாத கொழுப்பைக் கரைக்கும். மாணவர்கள் பரீட்சை நேரங்களில் சுறுசுறுப்பாகவும், ஞாபக சக்தியுடனும் திகழ இக்கீரை பெரிதும் உதவும். வெந்தயமும், மிளகும் சேர்த்துக் கொதிக்க வைத்து சூப அருந்தினால் நோய்த் தொற்றிலிருந்து உடம்பைப் பாதுகாக்கலாம். ஆகையால் வெந்தயத் திற்கு ஈடுசெய்ய வேறு எதுவும் இல்லை! அவ்வளவு மருத்துவ குனம் கொண்டதால் உபயோகித்து பயனடையவும். வெந்தயத்தை சமையலின் போது மறக்க வேண்டாம்.

# ஆப்பிள் (Apple)

"நாள்தோறும் ஒரு ஆப்பிள் சாப்பிடுகின்றவர்கள் வைத்தியரிடம் அடிக்கடி போகத்தேவையில்லை" இது ஆங்கிலப் பழமொழி.

ஆப்பிள் பழத்தில் பல்வேறு விட்டமின்களும், சத்துக்களும் காணப்படுகின்றன. அத்துடன் நோய் தீர்க்கும் மருந்தாகவும் இது காணப்படுகின்றது. மூளைக்கு வலிமையும், தெளிவையும் தரும். இப்பழம் மூளைக் கோளாறு உள்ளவர்களுக்கு மிகவும் ஏற்றது.

தினம் ஒரு ஆப்பிள் சாப்பிட்டால் பற்கள் வலுவடையும். ஈறுகளில் ஏற்படும் புண்கள், வலி, இரத்தம்வருதல் என்பன நீங்கி விடும். பேதி ஏற்பட்ட குழந்தைக்கு வேகவைத்த ஆப்பிளைப் பிசைந்து கொடுப்பது நல்லது.

நரம்புத் தளர்ச்சி, வாய் புலம்பல், தூக்கத்தில் எழுந்து நடத்தல், உறக்கம் வராமை போன்றவற்றுக்கும் சிறந்த மருந்து ஆப்பிள்.

இப்பழத்தில் கல்சியம், பொசுபரசு, இரும்பு, சர்க்கரை போன்ற பல விட்டமீன்கள் உண்டு. உழைப்பாளர்களுக்கு இது மிகவும் ஏற்றது. களைப்பை நீக்கி புதுத் தெம்பையும், மனவலிமையையும் கொடுக்கும்.

ஆப்பிள் சாப்பிடுவதால் இதயம், நரம்பு போன்றன நல்ல ஆற்றல் பெறுகின்றன.

# எக்ஸ்ரே பிள்ளைகளின் மூளையைப் பாதிக்கும்

சிறு வயதில் குழந்தைகளின் மூளையை எக்ஸ்ரே படம் எடுத்தால், வயதான பின் அந்தக் குழந்தை மந்த புத்தியுள்ளதாக மாறுகின்றது என்று சுவீடனின் ஆராய்ச்சியாளர்கள் சிலர் அண்மையில் தெரிவித்தனர். சுவீடனின் ஸ்டொக்ஹோம் நகரில் கெரோலின்ஸ்கா நிறுவனத்தின் பேராசிரியர் பேர் ஹோல் தலைமையிலான ஆராய்ச்சியாளர்கள் குழுவினரே இத்தகவலை வெளியிட்டுள்ளனர் என்று அண்மையில் பிரிட்டிஷ் மெடிகல் ஜேர்னல் என்ற சஞ்சிகை கூறியுள்ளது.

1950–1959க்கும் இடைப்பட்ட காலத்தில் மூளையில் எக்ஸ்ரே படம் எடுத்த 3094 பேரிடம் இந்த பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அப்போது தெரிய வந்தது யாதெனில், இவர்களில் அதிகமானோர் உயர் கல்வியைத் தொடர முடியாதவர்களும் சமூகத்தில் முன்னேற முடியாதவர்களும் ஆவர் என்று. தற்போது மூளையில் எக்ஸ்ரே எடுக்காத ஆனால் அந்தத் தொழில்நுட்பம் உருவாக்கியுள்ளது உருவாக்கப்பட்டுள்ள (CT SCAN) முறையில் மூளையின் படம் எடுக்கப்படுகின்றது. இந்த முறையில் கூடப் பாவிக்கப்படுவது எக்ஸ் கதிர்கள் என்பதால் முன்னேற்றப்பட்டு சோதனை கூட குழந்தைகளின் மூளைக்கு நல்லது அல்ல என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

# பதார்த்தங்கள்

| தூய பதார்த்தம் (puresubstance) | தூயதல்லாத பதார்த்தம் (impure substance) |
|---|---|
| 1. குறித்த உருகுநிலை உண்டு | குறித்தஉருகுநிலைகொண்டிராது |
| 2. குறித்த கொதிநிலை உண்டு | குறித்தஉருகுநிலைகொண்டிராது |
| 3. அப்பதார்த்தத்தின் இயல்புகளை மட்டும் காட்டும் | அவ்வவ்க் கூறுகளின் இயல்புகளை வெவ்வேறாகக் காட்டும் |
| 4. ஒரே விதமான நடத்தையைக் காட்டும் | ஒரே விதமாகவோ/வேறுபட்டவிதமாகவோ நடத்தையைக் காட்டும |
| 5. ஏகவினமானது | ஏகவினமானதாகவோ, பல்லினமானதாகவோ இருக்கலாம். |

| மூலகம் (Element) | சேர்வை (Compound) |
|---|---|
| 1. சூடாக்க நிறை அதிகரிப்பைக் காட்டும். | சூடாக்க நிறை அதிகரிப்பைக் காட்டுவதில்லை |
| 2. எளிமையான பதார்த்தங்களாக உடைவதில்லை | சில மட்டும் எளிமையான பதார்த்தங்களாக உடையும் |
| 3. வெப்பமேற்ற பிரிகையடையாது | சிலமட்டும் வெப்பமேற்ற பிரிகை அடையும். |
| 4. ஒரேயொரு பதார்த்தத்தை மட்டும் கொண்டது. | இரண்டு/இரண்டுக்கு மேற்பட்ட பதார்த்தத்தைக் கொண்டது. |

# பிணைப்புக்கள்

| அயன்பிணைப்பு (Ionic Bond) | பங்கீட்டுவலுப்பிணைப்பு (covalant bond) |
|---|---|
| 1. அயன்களால் ஆனது | மூலக்கூறுகளால் ஆனது. |
| 2. உயர்ந்த உருகுநிலையுடையது | தாழ்ந்த உருகுநிலையுடையது. |
| 3. உயர்ந்த கொதிநிலையுடையது. | தாழ்ந்த கொதிநிலைஉடையது. |
| 4. நீர்க்கரைசல் மின்னைக் கடத்தும் | நீர்க்கரைசல் மின்னைக்கடத்தாது |
| 5. பொதுவாகத் திண்மநிலையில் காணப்படும். | நீர்க்கரைசல் மின்னைக் கடத்தாது. வாயுநிலை திரவநிலையில் காணப்படும். |

# இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை குறித்து ஆணித்தரமாக எடுத்துரைக்க வாக்குகளைப் பயன்படுத்துக!

## திருமலை பிரச்சாரக் கூட்டத்தில் சம்பந்தன்

(திருகோணமலை)

**வடக்குக் கிழக்கு மாகாணத்திற்கு இடைக்கால தன்னாட்சி அதிகாரசபையைப் பெறுவதில் உறுதியாக நிற்கின்றோம் என்பதைச் சர்வதேச சமூகத்திற்கு ஆணித்தரமாக எடுத்துரைக்க தமிழ் பேசும் வாக்காளர்கள் தங்கள் வாக்குரிமையைப் பயன்படுத்த வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட முதன்மை வேட்பாளருமான இரா. சம்ப ந்தன் தெரிவித்தார்.**

தம்பலகாமம் பிரதேசத்தில் பட்டிமேடு,கூட்டாம்புரி, புதுக்குடியிருப்பு மற்றும் பல இடங்களில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தேர்தல் கூட்டங்கள் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றன. கூட்டமைப்பின் வேட்பாளர்களான க. துரைரட்ணசிங்கம், எஸ்.கௌரி முகுந்தன், சாகுல்ஹமீது,சதா. சண் முகநாதன் ஆகியோரும் இக்கூட் டங்களில் பங்குபற்றிப் பேசினர்.

முன்னைநாள் பாராளுமன்ற உறுப்பினர் சம்பந்தன் தொடர்ந்து பேசும்போது, வெளிநாட்டவரின் ஆட்சிக்குள் இலங்கை வருவதற்கு முன்னர், தமிழினம் இறைமையுள்ள சுதந்திர இனமாக வாழ்ந்து வந்தது. பிரிட்டிஷாரின் ஆட்சியின் கீழ் தான் கோல்புறூக ஆணைக்குழுவின் சிபார்சுக்கிணங்க , தங்களின் நிர்வாக வசதிக்காக 1833 ஆம் ஆண்டு இறைமையுடன் செயற்பட்ட பிராந்தியங்கள் எல்லாம் ஒன்றிணைக்கப்பட்டன. வடக்கு கிழக்கு மாகாணத்திற்கு இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை மற்றும் உரிமைகளை கொழும்பு அரசாங்கங்களால் தரமுடியாத நிலை ஏற்படுமிடத்து, இழந்து போன எமது இறைமையை மீட்டெடுப்பதற்கு எமக்கு உரித்துண்டு. வட்டுக்கோட்டைப் பிரகடனம் இதனைத்தான் வலியுறுத்துகின்றது என்றும் தெரிவித்தார்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகமுமான இரா. சம்பந்தன் யாழ். மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில் பங்குபற்றி பேசவிருக்கின்றார். மூன்று தினங்கள் யாழ். தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில் சம்பந்தன் பங்குபற்றியிருப்பதாகக் கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான சம்பந்தன் திருகோணமலை மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை வேட்பாளராக இருக்கிறார்.

இதேவேளை,தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் பிரச் சாரக் கூட்டங்கள் கந்தளாய்ப் பிர தேசத்தின் தமிழ்ப்பகுதி களில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றன. புதன்கிழமை ஆலங் கேணி, ஈச்சந்தீவு மற்றும் தமிழ்ப்பகுதிகளில் கூட்டமைப் பின் பிரசாரங்கள் இடம்பெற்றன. வாரஇறுதியில் வெள்ளிக் கிழமை ,சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை ஆகிய தினங்களில் மூதூர் கிழக்கு, ஈச்சிலம்பற்று மற்றும் கிளிவெட்டி பிரதேசங்க ளில் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு பிரசாரக் கூட்டங்கள் நடை பெறவுள்ளன.

# கிளிநொச்சி, பூநகரியில் சமகால அரசியல் கருத்தரங்கு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பிரதேச முச்சக்கரவண்டி உரிமையாளர்களின் சமகால அரசியல் கருத்தரங்கு நேற்று முன்தினம் கிளிநொச்சி சந்திரன் பூங்காவில் நடைபெற்றது.

இதில் சமகால கருத்துரைகளை கிளிநொச்சி பிரதேச அரசியல் துறைப்பொறுப்பாளர் க.நிருபன், கிளிநொச்சி மாவட்ட அரசியல். துறையைச்சார்ந்த ம.திருமறவன் கிளிநகர் வலயப் பொறுப்பாளர் திருமாறன் ஆகியோர் வழங்கினர். பின்னர் சங்கச் செயற்பாடுகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

இதேவேளை கடந்த புதன் கிழமை பூநகரி-செட்டியகுறிச்சி கிராம சேவகர் தி.சிவலிங்கம் தலைமையில் கறுக்காய்த்தீவு அ.த.க. பாடசாலையில் சமகால அரசியல் கருத்தரங்கு இடம் பெற்றது.

வட்டக்கச்சி பிரதேசத்தில் தொடர்ந்து பாடசாலை ரீதியான சமகால கருத்தரங்குகள் நடைபெற்று வருகின்றன. வட்டக்கச்சி மகாவித்தியாலயத்தில் 08.03.2004 காலை 10.00 மணிக்கு தேசிய எழுச்சிப் பேரவை செயலர் பொன்னுத்துரை தலைமையில் இடம்பெற்றது.

இதில் பிரதேச அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் செங்கதிர் கருத்துரைகளை வழங்கினார். தொடர்ந்து.

இராமநாதபுரம் மகாவித்தியாலயத்தில் இரண்டு மணிக்கு பாடசாலை முதல்வர் இராஜ மகேந்திரம் தலைமையில் ஆரம்பமாகியது. இதனைத் தொடர்ந்து தமிழீழ நிர்வாக சேவைகள் துணைப் பொறுப்பாளர் இளஞ்சேரன் அரசியல் சம்பந்தமான கருத்துரைகளை வழங்கினார். (12, 34)

# வென்னப்புவ பிரதேச சபை தலைவர், உபதலைவர் விளக்கமறியலில்

(கொழும்பு)

வென்னப்புவ பிரதேச சபையின் தலைவரும், உபதலைவரும் 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். இவர்கள் இருவரும் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்தவர்கள்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஆதரவாளர்கள் இருவரைத் தாக்கியதுடன் அவர்களின் வீடுகளையும் சேதப்படுத்திய குற்றச்சாட்டும் இவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ளது. (32)

# கிழக்கில் கருணாவின் பிரச்சினை சமாதான முயற்சியைப் பாதிக்காது

## அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ்

(கொழும்பு)

கிழக்கில் தற்போது ஏற்பட் டுள்ள நிலைமை சமாதான முயற்சிகளில் பாரிய பிரச்சினைகள் எதனையும் ஏற்படுத்ாதென அர சாங்கம் நம்புவதாக ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அத்துடன் தென்பகுதியி லுள்ள இதர அரசியல் கட்சிகள் புலிகள் இப்பிரச்சினையை சுய அரசியல் லாபங்க ளுக்காக பயன்படுத்த வேண்டாமெனவும் கோரியுள்ளார்.

# இத்தாலியிலிருந்து வந்தவர் போலி டொலர் நோட்டுடன் கைது

(கொழும்பு)

இத்தாலியில் இருந்து நாடு திரும்பியவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் தீர்வையற்ற கடைத் தொகுதியில் பொருட்களை வாங்கும் போது போலி டொலர் நோட்டுக்களைக் கொடுத்துள்ளார்.

இதனையடுத்து கட்டுநாயக்க குற்றத்தடுப்புப் பொலிசார் இந்த நபரைக் கைது செய்துள்ளனர்.

# மசகு எண்ணெய் விலை அதிகரிப்பால் மாதாந்தம் 131 கோடி மானியம் வழங்கல்

(கொழும்பு)

கடந்த சில மாதங்களாக உலக சந்தையில் மசகு எண்ணெயின் விலை அதிகரித்து வருவதால், இலங்கையைப் பாதிக்காத வகையில் அரசாங்கம் ஒரு மாதத்திற்கு 131 கோடி ரூபாவை நிவாரணமாக திறைசேரிக்கு வழங்கு கின்றது.

உலக சந்தையில் மசகு எண்ணெயின் விலையேற்றத்திற்கு அமைய 1 லீற்றர் பெற்றோல் 65 ரூபா 24 சதமாக இருக்கவேண்டும். இங்கு 57 ரூபாவுக்கு விற்கப் படுகின்றது.

டீசலும் 41 ரூபா 14 சதமாக இருக்க வேண்டும். இங்கு 32 ரூபாவுக்கு விற்கப்படுகின்றது. மண்ணெய் 32 ரூபா 23சதத்திற்கு விற்கப்பட வேண்டும். இங்கு 25 ரூபா 50 சதமாக விற்கப்படுகின்றது. இவ்வாறு அரசாங்கப் பேச்சாளர் கூறியுள்ளார்.

# தினக்குரல்,வீரகேசரி தினசரிகள் நேற்று முன்தினம் எரிப்பு

கொழும்பிலிருந்து மட்டக்களப்பிற்கு அனுப்பப்பட்ட தினக்குரல் மற்றும் வீரகேசரி பத்திரிகைகள் இனம்தெரியாத நபர்களினால் நேற்று முன்தினம் பறிமுதல் செய்யப்பட்டு எரிக்கப்பட்டுள்ளன.தினக்குரல் பத்திரிகை பறி முதல் செய்யப்பட்டமை இது இரண்டாவது தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

# மட்டு .பாடசாலை மாணவர்கள் ரமேஸ்,கௌசல்யனை கிளி.இல் சந்தித்தனர்

(அலுவலகசெய்தியாளர்)

மட்டக்களப்பு மாவட்ட பாடசாலை மாணவர்கள் கடந்த புதன் கிழமை பகல் கிளிநொச்சிக்கு விஜயம் மேற்கொண்டு மட்டக்களப்பு சிறப்புத்தளபதி ரமேஸ், மட்டு அரசியல் துறைப் பொறுப்பாளர் கௌசல்யன; விடுதலைப்புலிக ளின் மூத்த உறுப்பினர் கரிகாலன் ஆகியோரைச் சந்தித்து கலந்துரையாடினர்.

பகல் 10.30மணி முதல் 11.30 மணிவரை மேற்படி கலந்துரையாடல்கள் இடம் பெற்றன.

கலந்துரையாடல்களையடுத்து இதில் கலந்துகொண்ட மாணவர்கள் கூட்டாகச்சேர்ந்தும் தனித்தனியாகவும் மட்டு அம்பாறை சிறப்புத் தளபதி ரமேஸ் அவர்களுடன் புகைப்படம் பிடித்துக் கொண்டனர்.

அடுத்து மேற்படி மாணவர்களை சிறப்புத்தளபதி ரமேசும், மட்டு அம்பாறை அரசியல் துறைப் பொறுப்பாளர் கௌசல்யனும் வழியனுப்பிவைத்தனர். (சோ)

# கண்டெடுப்பு

காரைநகரைச் சேர்ந்த நல்லதம்பி புஸ்பகுமார் என்பவரது. அடையாள அட்டை 852392975V பயண அனுமதி அட்டை என்பன வட்டக்கச்சியில் கண் டெடுக்கப்பட்டு ஈழநாதம் 'பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரித்துடையவர் அலுவலக நேரத்தில் சமுகமளித்து பெற்றுக் கொள்ளலாம். (12)

# சமாதான சூழலைக் குழப்புவதற்கு அரச ஊடகம் முயல்வது கண்டிக்கத்தக்கது

## வடக்கு கிழக்கு மாகாண கல்வியியலாளர் ஒன்றியம் தெரிவிப்பு

மூவின மக்களும் ஒற்றுமையாக வாழ்கின்ற திருகோணமலையில் சமாதான சூழலைக் குழப்பும் நடவடிக்கைகளில் அரச ஊடகம் ஈடுபடாதிருக்க வேண்டும் என்று சமாதானத்தின் பெயரால் கேட்டுக்கொள்வதாக வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வியியலாளர் ஒன்றியம் அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது. அறிக்கை வருமாறு,

ஒரு தலைமைத்துவத்தின் கீழ் சமாதான சகவாழ்வுடன் இன,மத, பிரதேச வேறுபாடுகளின்றி ஒன்றுபட்டு வாழும் திருகோணமலை வாழ் மக்களிடையே அமைதியின்மையையும், வன்முறைகளையும் தூண்டிவிடும் வகையில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனம் செய்திகளை அடுத்த டுத்து ஒலிபரப்பி வருவது வேதனையை ஏற்படுத்தியுள்ளது.

9.3.2004 அன்று நண்பகல் செய்தியறிக்கையில் திருகோணமலை மாவட்டத் தளபதி பதுமன் கொல்லப்பட்டார் என்ற செய்தியையும்,மறுநாள் 10.3.2004 அன்று நண்பகல் செய்தியறிக்கையில் திருகோணமலையில் ஒழுங்கு செய்யப்பட்ட ஹர்த்தால் மக்கள் ஆதரவின்மையால் பிசுபிசுத்துப் போனது என்றும் உண்மைக்குப் புறம்பான செய்திகளை ஒலிபரப்பி திருகோணமலை வாழ் மக்களிடையே வன்முறையைத் தூண்டி அமைதியாக வாழ்கின்ற மக்களிடையே இயல்பு வாழ்க்கையைக் குழப்பி அரசியல்லாபம் தேடிக் கொடுக்கும் இந்த நடவடிக்கைகளை திருகோணமலை வாழ் கல்வியியலாளர்களாகிய நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

திருகோணமலை மக்களாகிய நாம் எதையும் சிந்தித்துச் சரியான நேரத்தில், சரியான முடிவை எடுப்பவர்கள் என்பதையும் தூரநோக்கிலான அரசியல் அறிவும், தெளிவும் கொண்டவர்கள் என்பதையும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தின் பணியாளர் சபை புரிந்துகொள்ள வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (25)

# அ.சா.அ. இணையப் பிரதிநிதிகளுடன் யாழ்.இல் பிரிட்டிஷ் தூதுவர் சந்திப்பு

குடாநாட்டுக்கான விஜயமொன்றை மேற்கொண்டு நேற்று முன்தினம் வருகை தந்திருந்த இலங்கைக்கான பிரிட்டிஷ் தூதுவர் ஸ்ரீவன் எவன்ஸ் யாழ். மாவட்ட அரச சார்பற்ற அமைப்புக்களின் இணையப் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேச்சுக்களை நடாத்தியுள்ளார்.

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு இரண்டு ஆண்டுகள் பூர்த்தியடைந்துள்ள நிலையில் யாழ். குடாநாட்டில் எதிர் கொள்ளப்படும் முக்கிய பிரச்சினைகள் தொடர்பாக அறிந்து கொள்வதிலேயே பிரிட்டிஷ் தூதுவர் ஆர்வம் காட்டியிருந்ததாகக் கூறப்படுகின்றது.

நல்லூர் கோவில் வீதியிலுள்ள இணைய அலுவலகத்தில் இடம்பெற்ற இச்சந்திப்பில் இணையத்தின் தலைவர் வி. ஸ்ரீசக்திவேல் தலைமை தாங்கியிருந்தார். இயல்பு நிலையை தோற்றுவிப்பதில் உள்ள தடைகள் தொடர்பாகவே கூட்டத்தில் கலந்து கொண்ட பிரதிநிதிகள் பலராலும் எடுத்துக் கூறப்பட்டிருந்தது. (27)

# வடமேல் மாகாண சபைத்தேர்தல் ஏப்ரல்-24இல் நடைபெறும்

## -தேர்தல் ஆணையாளர் அறிவிப்பு

வடமேல் மாகாண சபைத் தேர்தல் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 24ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளதாக தேர்தல் ஆணையாளர் அலுவலகம் அறிவித்துள்ளது.

வடமேல் மாகாண சபையின் கீழ் குருநாகல், புத்தளம் ஆகிய இரு மாவட்டங்கள் நிருவகிக்கப்படுகின்றன. இரு மாவட்டங்களிலும் 15 இலட்சத்து 39 ஆயிரத்து 539 பேர் வாக்களிக்கத்தகுதி பெற்றுள்ளார்கள்.

# அரசின் நிதி ஒதுக்கீடு பற்றாக்குறையால்

# யாழ்.அகதி முகாம்களில் சுகாதார நிலை மோசம்

## மாவட்ட சுகாதாரப் பகுதி அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**யாழ்ப்பாணத்தில் உள்ள அகதி முகாம்களில் சுகாதார நிலைமைகள் சிறந்த முறையில் பேணப்படுவதில்லை என யாழ். மாவட்ட சுகாதாரப் பிரிவினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.**

கடந்தகால இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளால் புலம்பெயர்ந்த பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னரும் தம் சொந்த இடங்களில் குடியேற முடியாது யாழ்.மாவட்டத்திலுள்ள அகதி முகாம் களில் வாழ்ந்து வரு கின்றனர்.

இவ்வாறு இவர்கள் தற்காலிகமாகத் தங்கியுள்ள அகதிமுகாம்களில் போதியளவு மலசலகூட வசதிகள் செய்து கொடுக்கப் படாததாலும் அடர்த்தியான குடியிருப்புக்கள் காணப்படு வதாலும் இங்கு சுகாதார நிலை மைகள் மோசமாகப் பாதிக்கப் பட்டுள்ளன.

இதனை கவனத்திற் கொண்டு உரிய நடவடிக்கையினை மேற்கொள்ள சுகாதாரத் திணைக்களத்திற்கு ஒதுக்கப்படும் நிதி ஒதுக்கீடுகள் போதாது இருக்கின்றது. இதனால் தொற்றுநோய் பரவும் அபாயம் இம்முகாம்களில் தோன்றியுள்ளது. (33)

# போலி நோட்டுக்கள் குறித்து பொலிசார் எச்சரிக்கை

புத்தளத்தில் போலி ஆயிரம் ருபாதாள்கள் புழக்கத்திலுள்ளதாக பொலிசார் எச்சரிக்கை செய்துள்ளார்கள்.

இருவர்த்தக நிலையங்களில் ஆயிரம் ருபாதாள்கள் மாற்றிக் கொடுக்கப்பட்ட பின்னரே இந்த உண்மை தெரியவந்துள்ளது.

அதனால் புத்தளம் வர்த்தகர்கள் எச்சரிக்கையாக இருக்குமாறு கூறப்பட்டுள்ளது.

எனினும் போலி நாணயம் மாற்றியவர்கள் கண்டுபிடிக் கப்பட வில்லை.

### ஆனந்த சங்கரியின் சுயேட்சைக்குழு

# வேட்பாளர் சாந்த சொரூபன் போட்டியிலிருந்து விலகினார்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் வீ-ஆனந்தசங்கரி தலைமையில் போட்டியிடும் சுயேட்சைக்குழு வேட்பாளர் ஒருவர் தேர்தலிலிருந்து விலகிக் கொள்வதாக அறிவித்துள்ளார். பூட்டுச் சின்னத்தில் சுயேட்சைக்குழுவில் போட்டியிடும் இளைய தம்பி சாந்தசொரூபன்(கரவெட்டி) என்பவரே இவ்வாறு தேர்தலிலி ருந்தும் தேர்தல் நடவடிக்கைகளிலிருந்தும் விலகியுள்ளார். சுகயீனம் காரணமாகவே இவர் தேர்தலிலிருந்து ஒதுங்குவதாக இவரது குடும்பத் தவர்கள் பத்திரிகை அலுவலகங்களுக்கு அறிவித்துள்ளனர். வடபகு தியில் தேர்தலிலிருந்து விலகும் முதல் வேட்பாளர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

### -தேர்தலைக் கண்காணிக்க-

# 70 பேரைக் கொண்டகுழுவை ஐ.ஒன்றியம் அனுப்பும்

நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலை கண்காணிப்பதற்காக ஐரோப்பிய ஒன்றியம் 70 பேர் கொண்ட குழுவொன்றை இங்கு அனுப்பி வைக்கவுள்ளது.

ஜரிஸைச் நேர்ந்த ஜோன் குற்றாவின் தலைமையில் வரவிருக்கும் இந்தக்குழு கொழும்பை மையமாகக் கொண்டு நாடளாவிய ரீதியில் செயற்படவுள்ளது.

தேர்தல் ஆணையாளர் தயானந்ததிஸநாயக்க கேட்டுக் கொண்டதற்கு இணங்கவே ஐரோப்பிய ஒன்றியம் இந்தக்குழுவை அனுப்பி வைப்பதற்கு முடிவு செய்துள்ளது.

# ஐ.தே. முன்னணி வர்த்தகர்களுக்கு வழங்கிய வரிமன்னிப்பு அரசியல்யாப்பை மீறுகிறதா?

## -உயர் நீதிமன்றை ஆராயக் கோருகிறார் சனாதிபதி-

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் வர்த்தகர்களுக்கு வழங்கிய வரி மன்னிப்பு அரசியல் யாப்பு விதிகளை மீறுகின்றதா என்பதை ஆராயுமாறு சனாதிபதி உயர் நீதி மன்றத்திடம் கேட்டுள்ளார்.

அரசியல் யாப்பின் 129-வது சரத்திற்கு அமைய சனாதிபதி இவ்வாறு பிரதம நீதியரசர் சரத் என் சில்வாவிடம் கேட்டுள்ளார்.

சனாதிபதி இந்தக் கோரிக்கையில் அரசியல் யாப்பின்படி இவ்வாறு மன்னிப்பை சனாதிபதியினால் தான் வழங்க முடியுமென்று கூறியிருக்கின்றார்.

அரசாங்கத்தினால் நிறைவேற்றப்பட்ட 2003 ஆம் ஆண்டு 10ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் பிரகாரம் பல வர்த்தகர்களுக்கு வரி மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது தெரிந்ததே.

# தொண்டமனாறு மீனவர்கள்மீது கடற்படையினர் கெடுபிடி

### -மீனவர் சங்கம் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

விளக்குகள் பொருத்தப்படாத படகுகளில் சென்று தொழிலில் ஈடுபடுவோர் கைது செய்யப்படுவதுடன் அவர்கள் வசமிருக்கும் உடைமைகளும் பறிமுதல் செய்யப்படும் என தொண்டமனாறு மீனவர்களை கடற்படையினர் எச்சரித்துள்ளனர்.தொண்டமனாறு கடல் நீரேரியில் மீன்பிடிப்பதற்குத் தடைவிதித்திருந்த படையினர் அண்மையில் மீன்பிடிப்பதற்கான அனுமதியை வழங்கி இருந்தனர். இதற்கமைவாக பலத்த சோதனைக் கெடுபிடிகள் மத்தியில் தொழிலுக்குச் சென்று வரும் மீனவர்கள் மீதே புதிய இந்நடைமுறையைத் திணித்துள்ளனர்.

மேற்படி நீரேரியில் தொழில் செய்யச் செல்லும் மீனவர்கள் இலகுவில்இனங்காணக் கூடியவாறான விளக்குகளைத் தமது படகுகளில் பொருத்தியிருக்க வேண்டும் எனவும் அவ்வாறு பொருத்தப்பட்டிருக்காத படகு உரிமையாளர்கள் படையினரால் உடனடியாகவே கைது செய்யப்படுவர் எனவும் அறிவுறுத்தியுள்ளனர்.

இதனால் தமது இயல்பான தொழில் நடவடிக்கை பாதிக்கப்பட்டிருப்பதாகவும் இவ்வாறான அச்சுறுத்தல்கள் தொழிலாளிகளிடையே பீதியை உருவாக்கியிருப்பதாகவும் அப்பகுதிமீனவர் சங்கம் கண்டனம் வெளியிட்டுள்ளது. (33)

# குப்பைக்கு வைத்த தீயே ஆயுதக்களஞ்சிய தீவிபத்திற்குக் காரணம்

### இராணுவ அதிகாரி தெரிவிப்பு

(கொழும்பு)

கனேமுல்ல இராணுவ கமோண்டோ முகாமின் ஆயுதக் களஞ்சியமொன்று திடீரென்று தீப்பற்றி எரிந்து வெடித்துச் சிதறியுள்ளது. இராணுவ முகாம் துப்புரவுப் பணியில் ஈடுபட்டிருந்த கமோண்டோ படையினர் குப்பைத் தொட்டியொன்றுக்கு தீவைத்த போது அதிலிருந்து பரவிய தீயே இதற்குக் காரணம் என்றுஇராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

பயிற்சி பெறும் கமோண்டோ படையினருக்கு துப்பாக்கி ரவைகள் வழங்கும் ஆயுதக் களஞ்சிய சாலையே இவ்வாறு வெடித்து தீப்பற்றி எரிந்துள்ளது. சுமார் இரண்டு மணித்தியாலங்கள் நெருப்பு எரிந்ததாகவும் கொழும்பு மாநகர சபையினரும், இராணுவ தீயணைப்புப் பிரிவுகளும் தீயணைப்புப் பணியில் ஈடுபட்டு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளதாகவும் இராணுவ அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.இச்சம்பவம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது தெரிந்ததே.


# உவது பிறந்தநாள் வாழ்த்து

## 13• 03• 2004

## கோகுலன்/KOGULAN



கனகபுரம் 9ஆம் பண்ணையில் வசிக்கும் திரு. திருமதி கவிதாசன் தம்பதிகளின் செல்வப் புதல்வன் கோகுலன் /KOGULAN தனது இரண்டாவது பிறந்தநாளை கனகபுரம் இல்லத்தில் விமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை அம்மா, அப்பா, அம்மம்மா, அப்பம்மா, தாத்தா, பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமாமார், மாமிமார், சித்திமார், சித்தப்பாமார், அக்காமார் அண்ணன்மார், தம்பிமார், தங்கைமார், மச்சான்மார், மச்சாள்மார் மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் கனகபுரம் கருணாகரப்பிள்ளையார் அருள்பெற்று பலகலைகளும் கற்று பல்லாண்டு காலம் சிறப்பாக வாழ வாழ்த்துகின்றார்கள்.

தகவல்:
திரு. திருமதிக. கவிதாசன்
உச்சிப்பிள்ளையார் பல்பொருள் வாணிபம்,
இல. 95/9ஆம் பண்ணை,
கனகபுரம், கிளிநொச்சி.

(4308)



# பணிநிலை வெற்றிடம்

அன்புச் சோலை முதாளர் பேணலகத்திற்கு கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள பணிநிலைக்கு வேண்டியவர்கள் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

பணிநிலை:-
ஆண் பராமரிப்பாளர்(ஆண் முதாளர்களை)
வயது எல்லை:-30 வயதிற்கும் 50 வயதிற்கு உட்பட்டவர்.
ஊதியம்:-நேரில்கதைத்து தீர்மானிக்கப்படும்.

(சி.9331)



# பணிநிலை வேண்டுகை

ஆயப்பகுதியின் புளியங்குளப் பகுதிக்கு கீழ் வரும் பணிநிலைகளுக்கான வேண்டுகை கள் கோரப்படுகின்றன. தகைமையு டையவர்கள் 2004.03.17 ஆம் நாள் காலை 10.00 மணிக்கு நடுவப்பணியகம், ஆயப் பகுதி, கிளிநொச்சி எனும் முகவரிக்குச் சான்றிதழ்களுடன் வருகை தரவும்.

## ஆய இளநிலை அதிகாரி (ஆண்)

தகைமை:-
ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டதாரியாக இருத்தல் அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றின் உயர் தேசியக் கணக்கியல் டிப்ளோமா சான்றிதழை உடையவராக இருத்தல்.

## வீடுதிக் காப்பாளர் (பெண்)

தகைமைகள்:-
01) 35-50 வயதிற்கு இடைப்பட்டவராக இருத்தல்.
02) க.பொ.த (உ.த) சித்தியடைந்திருத்தல்.
03) உடல் ஆரோக்கியமும்,திடகாத்திரமும் உடையவராக இருத்தல்.

(சி.9415)



## சிந்தனைக்கு

புயலாகச் சீண்டும் எதிரியின் அடக்கு முறை அழுத்தங்களை எல்லாம் மலையாகத் தாங்கி நிற்கும் எமது மக்களை நான் பாராட்டுகின்றேன்.

தமிழீழத்தேசியத் தலைவர்.


# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

யாழ். சாலை, கிளிநொச்சி. 13 -03-2004


## முன்னுதாரணமான செயல்

விடுதலைப் புலிகள் இயக்கம் கோரிக்கை விடுக்கும் முன்னதாகவே நோர்வே அரசும் கண்காணிப்புக்குழுவும் கருணாவுடனான தொடர்புகளைத் துண்டித்துக் கொண்டுள்ளமை அவை அரசியல் யதார்த்தத்தையும் தமது பொறுப்பையும் உணர்ந்து கொண்டு செயற்பட்டுள்ளன என்றே கொள்ளமுடியும்.

அதாவது இனப்பிரச்சினை மற்றும் யுத்தநிறுத்த விடயத்தில் கருணாவை ஒருதரப்பாகவோ, அவரது கோரிக்கைகளையோ ஏற்றுக்கொள்ளாமை மிகவும் பொருத்தப்பாடானதொரு நடவடிக்கையேயாகும். ஏனெனில் கருணா இன்று எத்தரப்புடன் சம்பந்தப்பட்டவர் என்பதே கேள்விக்குரியதொன்றாகவேயுள்ளது.

கருணா விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்து நீக்கப்பட்டதோடு அனைத்துப் பொறுப்புக்களிலிருந்தும் அவர் விலக்கப்பட்டுள்ளார். கருணாவிடம் ஒரு தொகுதி ஆயுதத் தளபாடங்களும், விடுதலைப்புலிப் போராளிகளில் ஒருதொகுதியினரும் இருக்கின்ற போதும் அவர் யுத்தநிறுத்தத்திலோ, சமாதானப் பேச்சுவார்த்தையிலோ எந்த வகையிலும் பங்கு வகிக்க தகுந்தவரல்ல.

ஏனெனில் யுத்தநிறுத்த உடன்பாடும், சமாதானப் பேச்சுவார்த்தைகளும் விடுதலைப்புலிகளும் - சிறிலங்கா அரசிற்குமானதே ஒழிய வேறு எவருடனும் சம்பந்தப்பட்டதல்ல. நோர்வே அரசுகூட சமாதான ஏற்பாட்டாளர்கள் மட்டுமே. ஆனால் கருணாவுடன் யுத்தநிறுத்தத்தின் அடிப்படையிலோ, சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்பாகவோ பேசுவது எந்தவித அடிப்படையும் அற்றது. இதனை நோர்வே அரசும், யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுவும் நன்றே விளங்கிக் கொண்டுள்ளன. இதன்காரணமாகவே கருணாவுடன் இவ்விரு தரப்பும் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளாததோடு இதில் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழு மட்டக்களப்பில் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியில் தமது பணிகளை நிறுத்திக் கொண்டுமுள்ளது.

அவ்வாறில்லாது நோர்வே அரசும், கண்காணிப்புக்குழுவும் கருணாவுடன் ஏதாவது தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டிருந்தாலோ அன்றி கருணாவின் கோரிக்கைகளுக்குச் செவிசாய்த்திருந்தாலோ இந்நடவடிக்கை யுத்தநிறுத்த உடன்பாட்டிற்கு மாறான-பொறுப்பற்ற செயலாக இருந்திருக்க மு யும். அந்த வகையில் நோர்வே நடந்து கொள்வது வரவேற்கத்தக்கதேயாகும்.

இதேவேளை நோர்வேயினதும், கண்காணிப்புக் குழுவின் நடவடிக்கையானது இருதரப்பு விவகாரத்தை மூன்றாம் தரப்பு கையாள்வது எவ்வாறு என்பதற்கு நல்லதொரு எடுத்துக் காட்டாகும். ஏனெனில் விடுதலைப்புலிகளுக்கும் - கருணாவிற்குமிடையிலான பிரச்சினை விடுதலைப்புலிகளின் உள்வீட்டு விவகாரமாகும். இதில் யாராவது தலையீடு செய்வது எவ்வாறாயினும் ஏற்புடையதாக இருக்கமாட்டாது. சிறிலங்கா ஆட்சியாளர்கள் (இருதரப்பில்) எவராகிலும் விடுதலைப்புலிகளின் இயக்கத்தைப் பலமிழக்கச் செய்வதற்கு இது நல்லதொரு சந்தர்ப்பமென மதிப்பீடு ஒன்றைச் செய்யலாம். இதனால் விடுதலைப்புலிகளின் உள்வீட்டு விவகாரங்களில் தலையீடு செய்வது குறித்து அவர்கள் தீவிரமாகச் சிந்திக்கலாம். சில மறைமுக முயற்சிகளைக் கூட எடுத்திருக்கலாம்.

ஆனால் இது சாத்தியப்பாடானதொன்றாக ஒருபோதும் இருக்கப்போவதில்லை. மாறாக இனப்பிரச்சினை தொடர்பான தவறானதொரு அணுகுமுறை கைக்கொள்வதாகவே இருக்கமுடியும். ஏனெனில் விடுதலைப்புலிகளின் அமைப்பிற்குள் அண்மையில் ஏற்பட்டுள்ள நெருக்கடியானது (கருணாவின் செயற்பாடுகள்) புலிகள் இயக்கத்திற்கு சிறிதளவு பாதிப்புக்களை ஏற்படுத்தத் தக்கதே. எனினும் புலிகள் பலவீனமான நிலையை அடைந்து விட்டார்கள் என எவரும் கருதின் அவர்கள் ஏமாற்ற மடையவேண்டியதாகவே இருக்கும்.

இவற்றை நோர்வே அரசு நன்கு புரிந்து கொண்டதாகவே கருத இடமுண்டு. ஏனெனில் சிறிலங்கா அரசு - விடுதலைப்புலிகள் இருதரப்பு உடன்பாட்டில் வேறுதரப்புக்கள் சம்பந்தப்படுவதோ, தலையீடு செய்வதோ பொருத்தப்பாடானதாக இருக்க மாட்டாது. இதன் அடிப்படையாக வைத்தே கடந்தகால அரசியல் நடவடிக்கைகள், சமாதானப் பேச்சுவார்த்தைகள் என்பனவும் இடம்பெற்று வந்துள்ளன.

இந்த வகையில் நோர்வேயின் இந்நடவடிக்கையானது ஒரு முன்னுதாரணமாகக் கூடக் கொள்ளத்தக்கதாகும். அதிலும் குறிப்பாக இனப்பிரச்சினை விவகாரத்தில் ஒருதரப்பாகச் சம்பந்தப்படும் சிறிலங்கா ஆட்சியாளர்கள் இதில் கவனம் செலுத்துதல் அவசியமானதாகும். மாறாக விடுதலைப் புலிகளின் உள்விவகாரத்தில் தலையீடு செய்வார்களே யானால் இலங்கையில் சமாதானம் என்பதை சாத்திய மற்றதாக்குவதற்கு அவர்கள் செய்யும் பங்களிப்பாகவே இது இருக்கும்.

# தப்பி ஓடிய கொழும்பு மாவட்ட இராணுவத்தினர் இம்மாதம் 22முதல் 26வரை ஓய்வு பெறமுடியும்

### இராணுவத் தலைமையகம் அறிவிப்பு

(கொழும்பு)

கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்த தப்பியோடிய சுமார் ஐயாயிரம் இராணுவத்தினர் தமது சேவையில் இருந்து உத்தியோக பூர்வமாக இம்மாதம்22ஆம் திகதி தொடக்கம் 26ஆம் திகதி வரை ராஜினாமாச் செய்ய முடியும் என்று இராணுவத் தலைமையால் அறிவிக்கப்பட்டுள்ளது. சிறிலங்கா இராணுவத்திலிருந்து இதுவரை ஐம்பதாயிரம் பேர் தப்பியோடியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவர்களுக்கான சுயவிருப்பிலான ஓய்வுபெறும் திட்டத்தை இராணுவத் தலைமையகம் அறிவித்துள்ளது.

அடுத்தமாதம் நடைபெறவுள்ள தேர்தலில் இராணுவத்திலிருந்து தப்பிச் சென்றவர்கள் வன்முறைகளில் ஈடுபடுவதைத் தடுக்கும் முகமாக இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக தலைமையகம் அறிவித்துள்ளது.

# யாழ்.இல் 2000ஆம் ஆண்டிலிருந்து இற்றைவரை 1730 பெண் உரிமை மீறல் சம்பவங்கள்

### பொலிஸ் அலுவலக புள்ளிவிபரம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் பெண்கள் உரிமைகள் மீறப்படும் சம்பவங்கள் அண்மைக்காலமாக அதிகரித்து வருகின்றது.

பாலியல் துன்புறுத்தல் மற்றும் துஸ்பிரயோக சம்பவங்கள் உட்பட 2000ஆம் ஆண்டிலிருந்து இற்றைவரை 1730 பெண் உரிமை மீறல் சம்பவங்கள் இடம்பெற்றிருப்பதாக யாழ். மாவட்ட பொலிஸ் அலுவலகப் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

அந்த அடிப்படையில் 2000ஆம் ஆண்டில் 261 பெண் உரிமை மீறல்களும், 2002ஆம் ஆண்டில் 295 பெண் உரிமை மீறல் சம்பவங்களும், 2003ஆம் ஆண்டில் 794 உரிமை மீறல்களும், இவ்வாண்டு (2004) ஆரம்பத்திலிருந்து இற்றைவரை 180 சம்பவங்களும் இடம்பெற்றிருப்பதாக இப்புள்ளிவிபரக்குறிப்பு தெரிவிக்கின்றது.

அதேவேளை இவ்வாறான சம்பவங்களால் நேரடியாகவும், மறைமுகமாகவும் 2500ற்கு மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை பொலிஸ் முறைப்பாடு செய்யப்பட்டது போக பெண உரிமைமீறல்சம்பவங்கள் பல நூற்றுக்கணக்கானவை இடம் பெற்றுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (33)

# தேர்தல் பிரச்சாரத்தில் இன, மத உணர்வை கிளற வேண்டாமென்கிறது ஐ. ஒன்றியம்

நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தல் காலப்பகுதியில் வேண்டாத வார்த்தைப் பிரயோகங்களை மேற்கொண்டு இனரீதியான அல்லது மதரீதியான உணர்வுகளைக் கிளறிவிட வேண்டாம் என்று ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளிவிவகாரங்களுக்கான ஆணையாளர் கிறிஸ் பற்றன் இலங்கையின் அரசியல் தலைவர்களைக் கேட்டுள்ளார்.

பொதுத் தேர்தலுடன் தொடர்பாக ஏற்கனவே இடம் பெற்றிருக்கின்ற படுகொலைகள், வன்முறைகள் ஆகியவை குறித்தும் அவர் தனது கண்டனத்தையும் கவலையையும் தெரிவித்துள்ளார்.

# விசேட திட்டங்களை செயற்படுத்தி பயனாளிகளை வளம்படுத்த முடியும்

### -வவு.மாவட்ட த.பு.கழக பணிப்பாளர்

வவுனியா மாவட்ட ஐக்கிய நாடுகள் சிறுவர் பாதுகாப்பு நிறுவனத்தின் (யுனிசெவ்) மாதாந்த கலந்துரையாடல் யுனிசெவ் நிறுவனத்தின் கேட்போர் கூடத்தில் அண்மையில் இடம்பெற்றது. இதில் யுனிசெவ், யு.என்.டி.பி. சேவ்த சில்ரண்ட், யு.என்.எச்.சி.ஆர்.நிறுவனங்களின் பிரதிநிதிகள், வவுனியா தமிழர் புனர்வாழ்வுக் கழகம் போன்றன கலந்து கொண்டன.

அங்கு வவுனியா மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழக பணிப்பாளர் சி.திருஞானசம்பந்தமூர்த்தி அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் சிறுவர் நலத்திட்டத்தினர் 239 பதினெட்டு வயதிற்கு உட்பட்ட, யுத்தத்தால் பாதிப்புற்று, பாடசாலைகளிலிருந்து இடைவிலகிய மாணவர்கள் தொடர்பான தகவல்களை யுனிசெவ் நிறுவனத்திடம் சமர்ப்பித்துள்ளோம். அவர்களின் குடும்பங்கள் மிக வறுமையான நிலையில் இருப்பதால் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு வேண்டிய நுண்கடன்களை வழங்கி உதவவேண்டும் எனக் கேட்டுக் கொண்டதற்கு யு.என்.டி.பி. பிரதிநிதி தங்கள் நிறுவனக் கட்டமைப்பின்படி உடனடியாக இதனைச் செயற்படுத்த முடியாதுள்ளது எனத் தெரிவித்தார்.

இதற்குப் பதிலளித்த தமிழர் புனர்வாழ்வுக்கழக பணிப்பாளர் உங்கள் நிறுவனக் கட்டமைப்புக்கள் இதற்கு வழிசமைக்காமல் பயனாளிகள் உடனடியாக பயன்பெறும் விதத்தில் சர்வதேச நிறுவனங்கள் விசேடதிட்டங்களைச் செயற்படுத்த வேண்டும். அல்லாவிடில் எங்களுடைய சந்திப்புக்களும் செயற்பாடுகளும் அர்த்தமற்றதாக விடுவதோடு மக்களுக்கு சிறந்த சேவையினை வழங்க முடியாத நிறுவனங்கள் என்ற நிலைக்குத் தள்ளப்படும் அபாய நிலையில் உள்ளோம் எனத் தெரிவித்தார்.

### சந்திப்பு

வடக்கு கிழக்கு மாகாணத்தில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் வாக்களிப்பு நிலையங்களை அமைப்பது குறித்து மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், திருகோணமலை, வன்னி ஆகியவற்றின் அரச அதிபர்கள் இன்று 13ஆம் திகதி தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்கவை சந்திக்கவுள்ளார்கள்.

# காலியில் நடந்த முதலாவது டெஸ்டில் அவுஸ். 197 ஓட்டங்களால் வெற்றி

### ஷேன்வோர்ன் 500 விக்கெட்டுக்களைக் கடந்தார்

காலி சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்ற சிறிலங்காவிற்கும், அவுஸ்திரேலியாவிற்குமான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் அவுஸ்திரேலியா 197 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.


சிறிலங்கா அணி 352 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி தனது இரண்டாவது இனிங்சை ஆடத் தொடங்கி தனது சகல விக்கெட்டுக்களையும் இழந்து 154 ஓட்டங்களை மட்டுமே பெற்றுத் தோல்வியைத் தழுவியது.

இவ் டெஸ்ட் போட்டியின் ஸ்கோர் விபரம் வருமாறு, அவுஸ்திரேலியா முதல் இனிங்ஸ் 220, இரண்டாவது இனிங்ஸ் 512/8. முதலாவது இனிங்சில் முரளிதரன் ஆறு விக்கெட்டுக்களையும், இரண்டாவது இனிங்சில் ஐந்து விக்கெட்டுக்களையும் கைப்பற்றினார்.

சிறிலங்கா அணி முதலாவது இனிங்ஸ் 381, இரண்டாவது இனிங்ஸ் 154. ஷேன்வோர்ன் இரண்டு இனிங்சிலும் தலா ஐந்து விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

மூன்று டெஸ்ட் கொண்ட இந்தப் போட்டித் தொடரில் அவுஸ்திரேலியா அணி தற்போது ஒன்றுக்கு பூச்சியம் என்ற நிலையில் முன்னணியில் உள்ளது.

இதேவேளை, இந்த டெஸ்டில் அவுஸ்திரேலியாவின் பந்து வீச்சாளர் ஷேன்வோர்ன் தனது 500 விக்கெட்டுக்களைத் தாண்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# தேர்தலை நடத்தக்கூட முடியாதளவுக்கு நாட்டுநிலைமை மோசமாகியுள்ளது

## - ஜே.வி.பி.தலைவர் சோமவன்ச அமரசிங்க

இந்த நாட்டில் சனநாயகத்தை நிலைநிறுத்துவதற்கான வேலைத்திட்டமொன்று ஏற்படுத்தப்பட வேண்டும். தேர்தலைக் கூட நடத்த முடியாத அளவுக்கு நாடு மிக மோசமான நிலைக்குள்ளாகியுள்ளது. சனநாயகத்திற்கு மிக அச்சுறுத்தல்கள் ஏற்பட்டிருக்கின்றன. நாங்கள் பதவிக்கு வந்தால் அரசியல் பழிவாங்கலை நிறுத்துவோம். ஏனைய கட்சிகளுக்கு நாம் முன்னுதாரணமாக இருப்போம்.

இவ்வாறு எம்பிலிப்பிட்டிய தேர்தல் பிரச்சாரத்தில் நேற்று முன்தினம் ஜே.வி.பி.யின் தலைவர் சோமவன்ச கூறியுள்ளார்.

நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பியதாக ரணில் விக்கிரமசிங்க பொய்யைக் கூறிவருகின்றார். அவர் ஆட்சியைக் கைப்பற்றியதிலிருந்து நாட்டின் பொருளாதாரம் சீரழியத் தொடங்கி விலைவாசிகளும் அதிகரிக்கத் தொடங்கிவிட்டன.

இதன் மூலம் மக்களை வாழ முடியாத நிலைக்குள் தள்ளிவிட்டார். இது தான் அவர் செய்த சேவை. இதையிட்டு மக்கள் நன்கு சிந்திக்கவேண்டும்.

பொதுசன ஐக்கியமுன்னணியும், ஜே.வி.பியும் ஒன்றிணைந்தால் மீண்டும் யுத்தம் ஏற்படும் என்று ஐ.தே.கட்சி பிரச்சாரம் செய்கின்றது.

இப்போது ரணிலும், விடுதலைப்புலிகளும் மக்களை அச்சுறுத்தப் போலி வேடங்களை நடத்துகின்றார்கள். முதன்முதலாக கிராமப்புறங்களுக்கு மனிதப் பிரேதங்கள் அனுப்பிவைக்கப்பட்டது ஜே.ஆர். காலத்தில் தான்.

இதனை இன்னும் மக்கள் மறந்துவிடவில்லை. புலிகளின் தலைவர் பிரபாகரனின் மடியில் தமிழ் மக்களைப் போட்டவர் ஜே.ஆர்.தான். இந்நாட்டை அமெரிக்காவின் பிராந்திய கொலனி ஆக்குவதற்கு ரணில் முயன்று வருகின்றார். ஆனால் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு அடிமையாவதற்கு சனாதிபதி சந்திரிகா தயாராக வில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

# வேலையற்ற பட்டதாரிகளுக்கான முக்கிய கலந்துரையாடல்

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள வேலையற்ற பட்டதாரிகளுக்கான முக்கிய தீர்மானங்களை கலந்தாலோசிக்கவுள்ளதால் இன்று முற்பகல் 10மணியளவில் புதுக்குடியிருப்பு ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாசாலையில் கலந்துரையாடல் நடைபெறவுள்ளது. எனவே முல்லைத் தீவு மாவட்டத்தில் உள்ள அனைத்து வேலையற்ற பட்டதாரிகளையும் தவறாது சமுகம் தருமாறு வேலையற்ற பட்டதாரிகள் ஒன்றியம் கேட்டுக்கொள்கிறது.

# பூநகரி திலீபன் மருத்துவமனை இரண்டாம் ஆண்டு நிறைவு

(பூநகரி)

பூநகரி தியாகதீபம் திலீபன் மருத்துவமனை ஆரம்பிக்கப்பட்டு இரண்டாம் ஆண்டு நிறைவு நாள் இன்று கொண்டாடப்படவுள்ளது.

பிற்பகல் 3 மணியளவில் நிறைவு நிகழ்வு நடைபெற வைத்தியசாலை நிர்வாகம் ஏற்பாடு செய்துள்ளது.

கடந்த இரு வருடங்களில் இந்த வைத்தியசாலையில் 15 மகப்பேறுகள் நடைபெற்றன. மேலும் 51,202 நோயாளர்கள் சிகிச்சை பெற்றுள்ளனர். நலன் விரும்பிகள் அனைவரையும் வைத்தியசாலை நிர்வாகம் அழைக்கின்றது. (34)

# பாராளு. கூடி 8 நாட்களுக்குள் சம்பள முரண்பாட்டிற்குத் தீர்வு!

## வைத்தியர்களுக்கு நிதி அமைச்சர் உறுதி

(கொழும்பு)

வைத்தியர்களின் நிலைமை தொடர்பாகக் கவனம் செலுத்தி சுகாதாரத்துறையைச் சேர்ந்த சகலரினதும் கருத்துக்களைப் பெற்று தற்போது நிலவும் சம்பள முரண்பாட்டிற்கு பாராளுமன்றம் கூடி எட்டு நாட்களுக்குள் தீர்வொன்றைப் பெற்றுத் தருவதாக நிதியமைச்சர் கே. எம். சொக்ஸி தெரிவித்துள்ளார்.

கொழும்பில் அரசாங்க வைத்தியர்கள் சங்கப் பிரதிநிதிகளுக்கும், நிதி அமைச்சர் சொக்ஸிக்கும் இடையில் நேற்று நடைபெற்ற பேச்சுவார்த்தையின்போதே நிதியமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

நிதியமைச்சரின் தலைமையில் நடைபெற்ற இந்தப் பேச்சுவார்த்தையின் போது நிதியமைச்சின் செயலாளர் சரித் ரத்வத்த சுகாதார அமைச்சின் செயலாளர் றெஜி முபரேரா, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் காந்த லியனகே ஆகியோர் கலந்து கொண்டனர்.

அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் சார்பில் அதன் தலைவர் டாக்டர் குமார வீரசேகர, செயலாளர் டாக்டர் எச்.பி.ஜே.சி. ஆரியரட்ண உட்பட சங்கத்தின் பல பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

நோயாளிகளைச் சிரமத்திற்கு உள்ளாக்கும் இந்த வேலை நிறுத்தப் போராட்டத்தைக் கைவிடுமாறும் வைத்தியர் சங்கத்திடம் அமைச்சர் கேட்டுள்ளார்.

இதேவேளை, சம்பள மறுசீரமைப்பிற்காகப் போராட்டத்தில் ஈடுபடும் ஏனைய தொழிற்சங்கங்களிடமும் பொதுத் தேர்தல் முடியும் வரை எந்தத் தீர்மானத்தையும் எடுக்க முடியாத நிலையில் உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# மூதூர்கிழக்கு வெருகல் பகுதியில் கூட்டமைப்பு பிரச்சாரம் ஆரம்பம்

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்தில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள மூதூர்கிழக்கு மற்றும் வெருகல் ஈச்சிலம்பற்றுப் பிரதேசம் ஆகிய இடங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் பிரச்சாரக் கூட்டங்கள் நேற்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகின. ஞாயிற்றுக்கிழமை வரை நடைபெறும் இத்தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில் கூட்டமைப்பின் தலைமை வேட்பாளர் இரா.சம்பந்தன் தலைமையில் ஏனைய வேட்பாளர்களும் பங்குபெற்றுகின்றனர். (25)

# சந்திரிகாவின் கட்டளைகளை ஏற்பதில்லை ஐ.தே.மு. அமைச்சர்கள் தீர்மானம்

(கொழும்பு)

சனபாதிபதி சந்திரிகாவினால் அடிக்கடி வெளியிடப்படும் திடீர் கட்டளைகளை இனிமேல் தாங்கள் ஏற்றுக்கொண்டு செயல்பட மாட்டோம் என ஐக்கிய தேசிய முன்னணி அமைச்சர் குழு தீர்மானம் எடுத்துள்ளது. தேர்தல் காலங்களில் அரச சொத்துக்களை தேர்தல் வேலைகளுக்கு ஈடுபடுத்துவது சம்பந்தமாக அறிக்கைகள் கட்டளைகள் இடுவது தேர்தல் ஆணையாளருக்கு மாத்திரமே அந்த அதிகாரங்கள் உள்ளதென அமைச்சர் குழு அறிவித்துள்ளது. மேலும் தேர்தல் நடக்கும் காலத்தில் பொலிஸ் உத்தியோகஸ்தர்களை வேறு இடங்களுக்கு மாற்றும் அதிகாரங்கள் சனாதிபதிக்கு கிடையாதெனவும் அக்குழு சுட்டிக்காட்டியுள்ளது. இக்கூட்டத்திற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமை தாங்கி இக்கட்டளையை கெபினட் அமைச்சர்களுக்கு அறிவித்துள்ளார்.

# திருமலை தபால் வாக்களிப்பு 1470 விண்ணப்பங்கள் நிராகரிப்பு

திருகோணமலை மாவட்டத்தில் தபால் மூலம் வாக்களிப்பதற்காக அனுப்பப்பட்ட விண்ணப்பங்களில் 1470 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதில் 108 விண்ணப்பங்கள் காலம்பிந்தி அனுப்பிய விண்ணப்பங்கள் என்று தேர்தல் அலுவலக வட்டாரங்கள் கூறின. ஏனைய காரணங்களுக்காக நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை 1362 ஆகும். ஆக மொத்தம் 8784 தபால் மூலம் வாக்காளர்களின் விண்ணப்பங்களே ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. மொத்தம் 10146 பேர் தபால் மூலம் வாக்களிக்கும் உரிமை கோரி விண்ணப்பித்திருந்தனர்.தேர்தல் தொகுதியாக தபால் மூலம் வாக்களிப்பதற்காக விண்ணப்பித்தோரின் எண்ணிக்கை வருமாறு சேருவில-5156, திருகோணமலை-2819, மூதூர்-2171 (25)

# புதிய நோட்டுக்கள் வெளியீடு

புதிய பாதுகாப்பு நடைமுறைகளுடன் கூடிய ஆயிரம் ரூபா, ஐந்நூறு ரூபா நோட்டுக்கள் மத்திய வங்கியினால் வெளியிடப்பட்டுள்ளது.

நிதியமைச்சர் ஏ.எஸ்.சொக்ஸி, மத்திய வங்கி ஆளுநர் ஏ.எஸ். ஜெயவர்தன ஆகியோரது கையொப்பத்துடன் வெளிவந்திருக்கும் புதிய நாணயத்தாள்களில் 2001 ஆம் ஆண்டு டிசம்பர் 12 எனத்திகதியிடப்பட்டுள்ளது.

இப்புதிய நாணயத்தாளில் 1000 ரூபா நோட்டுக்கள் G/106000001 எனும் தொடர் இலக்கத்துடனும் 500 ரூபா நோட்டுக்கள் H/72000001 எனும் தொடர் இலக்கத்துடனும் ஆரம்பமாகின்றது.

# இந்து சமயத்தில் உயர்புள்ளிபெற்ற மாணவர்கள் கௌரவிப்பு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி திருநெறிக் கழகத்தினரால் இந்து நாகரீகம், இந்து சமயப்பாடங்களில் உயர் தர வகுப்பு (தரம் 12,13) மாணவர்களுக்கிடையே நடாத்தப்பெற்ற போட்டிப் பரீட்சையில் உயர் புள்ளி பெற்றவர்கள் பதக்கம், பரிசு, சான்றிதழ் வழங்கிக் கௌரவிக்கப் பெறவுள்ளனர்.

மேற்படி நிகழ்வு இன்று பிற்பகல் 2.00 மணிக்கு கணேசானந்தா மகாதேவா சுவாமியின் ஆசியுரையுடன் வட்டக்கச்சி மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக கிளி. வலயக் கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினமும், சிறப்புவிருந்தினராக கரைச்சிப் பிரதேசச் செயலர் பொன். நித்தியானந்தமும் கலந்துகொண்டு உயர்புள்ளிபெற்ற மாணவர்களுக்கு பதக்கம் அணிவித்து பரிசில்கள், சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

### யாழ்...

மாவட்ட அதிகாரி தலைமையில் இடம்பெற்ற இச்சந்திப்பில் எதிர்வரும் பொதுத்தேர்தலை தமிழ்மக்கள் தம்அரசியல் அபிலாசைகளையும், மனவுணர்வுகளையும் வெளிப்படுத்தும்களமாக பயன்படுத்தவுள்ளதால் மக்களின் மனவுணர்வுகளைப் பாதிக்காத விதத்திலும், அவர்களின் உரிமைகளை பாதிக்காத விதத்திலும் பொலிசார் செயற்படவேண்டுமென புலிகள் தரப்பினர் வலியுறுத்தினர்.

இதனை ஏற்றுக்கொண்ட பொலிசார் இதற்குதம்மாலான முழு ஒத்துழைப்பும் வழங்கப்படும் என உறுதியளித்தனர். (33)

### தமிழர்....

னியா மாவட்ட நிர்வாகத்துறைப் பொறுப்பாளர் இளங்கதிரிடம் முற்பகல் 11.30 மணிக்கு வவுனியா மாவட்ட அரசியல்துறைச் செயலகத்தில் வைத்து கையளிக்கப்பட்டது. (21)

### பொது.....

ளனர். இதனால் இரு தரப்பினர்க்குமிடையே வாக்குவாதமும், கைகலப்பும் ஏற்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து அங்கு வந்த பொலிசார் ஈ.பி.டி.பி.யினரை அங்கிருந்து விலகிச் செல்லுமாறு பணித்துள்ளனர். (33)

### நாட்டின்...

சனைகளையும் தமிழீழ விடுதலைப் புலிகள் ஏற்க மாட்டார்கள். எனவே சிறிலங்கா சு.க.-ம.வி.மு. கூட்டால் நாட்டிற்கு எவ்வித நன்மையும் கிடைக்கப் போவதில்லை எனவும் பிரதமர் அங்கு தெரிவித்தார். (32)

### சூனியப்....

அரசியல் தலையீடு காரணமாக இந்த ஒழுங்கு குழப்பப்படலாம் என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது. எமது இந்த அச்சத்தை நாம் நோர்வே நாட்டின் சிறப்புத் தூதர் சூல் ஹெய்மிடம் தெரிவித்துள்ளோம்'' இவ்வாறு திலக் கூறினார்.

வியாழன் மாலை திருகோணமலை வந்த நோர்வே சிறப்பு சமாதானத் தூதர் எரிக் சூல் ஹெய்முக்கும், விடுதலைப்புலிகள் திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திலக்குக்கும் இடையேயான பேச்சுக்கள் நேற்றுக் காலை 11 மணியளவில் ஆரம்பமாகின. எரிக் சூல் ஹெய்முடன் நோர்வேயின் இலங்கைக்கான தூதர் ஹான்ஸ் பிரட்ஸ்கார் மற்றும் நோர்வே ராஜதந்திரிகளும் பங்குபற்றினர். இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பிரதம செயற்றிட்ட அதிகாரி எர்க்கி பொய்ஹறியுடன் திருகோணமலை கண்காணிப்புக் குழுவின் தலைவர் கேர்ட்ஸ்பேரும் பிரசன்னமாகியிருந்தனர்.

புலிகள் தரப்பில் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் திலக்குடன் மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் செல்வி காருண்யா, பொருண்மிய மேம்பாட்டு திருமலை மாவட்டப் பொறுப்பாளர் தர்மன் ஆகியோரும் பேச்சுக்களில் பங்குபற்றினர். சுமார் ஒரு மணி நேரம் வரை நடைபெற்ற பேச்சுவார்த்தை முடிவில் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் திலக், நோர்வே விசேட தூதர் எரிக் சூல் ஹெய்ம் ஆகியோர் செய்தியாளர்களைச் சந்தித்தனர். "பேச்சுக்கள் பயனுள்ளவையாக அமைந்தன" என்று சொன்ன திலக், "மட்டக்களப்பு-அம்பாறை மாவட்ட நெருக்கடியில் எமது நிலைப்பாட்டை மிகத் தெளிவாக சிறப்புத் தூதர் சூல் ஹெய்மிடம் தெரிவித்தேன். எமது பேச்சுவார்த்தையில், திருகோணமலை மாவட்ட பொருளாதார மற்றும் சமூக நிலவரம், தமிழ் - முஸ்லிம் உறவை வளர்ப்பது ஆகியன பற்றியும் ஆராயப்பட்டன என்றும் திலக் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். (25)

### கட்டுத்துவக்கு...

ளார். 28 வயதான மல்காமிகே பிறேமசிறி என்று அடையாளம் காணப்பட்டுள்ளார். மேலதிக விசாரணையினை வவுனியா பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர். (21)

### வாக்களிப்பது....

கப்படுகின்றது. எனினும் இது தொடர்பான முழுமையான தகவல்கள் வெளியாகாத போதிலும் இதற்கான இறுதி முடிவினை தேர்தல் ஆணையாளர் 17 ஆம் திகதி வெளியிடலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது. (21)

### தினமுரசு...

டுள்ளதாக புகார் செய்யுமாறு ஈ.பி.டி.பி உறுப்பினர்கள் அச்சுறுத்தியுள்ளனர்.

இதனையடுத்து அச்சங் காரணமாக அவ்வர்த்தகர் ஊர்காவற்துறை பொலிஸ் நிலையத்திலும் கடற்படையினரிடமும் புகார் செய்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (27)

### சந்திரிகா...

பாட்டினால் அங்கு நியாயமான தேர்தல் தொடர்பில் சந்தேகம் எழுந்துள்ளதாகவும் சனாதிபதி தமது முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளார். (32)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ஆம் ஆண்டு மார்ச் மாதம் 13ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.